விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 61 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 27 புதன்கிழமை (12.09.2012) | பக்கங்கள்: பதினாறு + 8

**கல்வி ஒளி இலவச இணைப்பிதழ் உள்ளே...**

### கிழக்கு மாகாணத்தில் யாருக்கு ஆதரவு?

# இறுதி தீர்மானமின்றி நிறைவடைந்தது மு.கா.வின் நேற்றைய உயர்மட்ட கூட்டம்

(நமது நிருபர்)

கிழக்கு மாகாண சபையில் ஆட்சிய மைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கா அல்லது இலங்கை தமிழரசுக் கட்சிக்கா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை மு.கா. நேற்று அறிவிக்கும் என எதிர் பார்க்கப்பட்ட நிலையில், நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற அக்கட் சியின் கூட்டம் முடிவேதும் எட்டப்படாத நிலையில் நிறைவடைந்துள்ளதாக மு.கா.வின் ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது.

கிழக்கில் ஆட்சியமைப்பதற்காக ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஸ்ரீல ங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை கோரியுள்ளன.

இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸா னது யாருக்கு ஆதரவளிப்பது என்ற இறுதித் தீர்மானத்தை உயர்மட்ட உறுப் பினருடன் கலந்து ஆலோசித்து நேற்று வெளியிடும் என அக்கட்சி நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இதனடிப்படையில் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் கொழும்பு கோல் பேஸ் ஹொட்டலில் கூடிய அக்கட்சி யின் உறுப்பினர்கள் கிழக்கில் ஆட்சியமைக்க ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணிக்கா அல்லது தமிழரசுக் கட்சிக்கா ஆதரவளிப்பது என்பது குறி த்து ஆலோசனையில் ஈடுபட்டனர். இந்த கூட்டம் இரவு 7.00 மணிவரை நீடித்தது. எனினும் எந்த 02

## கிழக்கில் மு.கா.வுடன் இணைந்து ஐ.ம.சு.மு ஆட்சியமைக்கும்

**அரசாங்கம் தெரிவிப்பு**

கிழக்கு மாகாண சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆளும் ஐ.ம.சு.மு ஆட்சி அமைக்கும். முதலமைச்சர் யார் என்பதை ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வார இறுதியில் அறிவிப்பார் என்று அரசாங்கம் 02

## தொண்டமானாற்றில் பஸ் வண்டி தீக்கிரை



(வல்வெட்டித்துறை)

யாழ்ப்பாணம்-பருத்தித்துறைக்கு இடை யிலான போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் சிற்றூர்தி ஒன்று இனந்தெரியாத நபர்களினால் எரிக்கப்பட் டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் வடமாராட்சி, தொண்ட மனாறு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமராட்சி 02

## தமிழ்க் கைதிகளின் விடுதலை வேண்டி வவுனியாவில் வழிபாடு

**1008 தேங்காயும் உடைக்கப்படும்**

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களினால் அரசி யல் கைதிகளாக பல சிறைகளிலும் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா குருமன்காடு காளி கோவிலில் சிறப்புப் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

சர்வதேச சிறைக்கைதிகள் தினத்தில் அரசியல் கைதி- களை விடுதலையை வலியுறுத்தும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 02

## பிற கட்சிகளுடன் சேரும் உரிமை முஸ்லிம் காங்கிரஸிற்கு இல்லை

**தேசிய சுதந்திர முன்னணி**

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு பிரிந்து சென்று தேர்தலில் போட்டியிட மாத்திரமே உரிமையுள்ளது. மாறாக, வேறுவொரு அரசியல் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்க தார்மீக உரிமை கிடையாது. அரசாங்கத்தின் உறுப் புக் கட்சி என்பதனை முஸ்லிம் காங்கிரஸ் நினை வில் வைத்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண் டும் என்று தேசிய சுதந்திர முன்னணி குறிப் பிட்டுள்ளது. 02

## இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழ்ப்பாணம் வந்த மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழ்ப்பாணத் திற்கு வந்த மூன்று பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளதாக யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியிருந்த போது விசா முடிவ டைந்துள்ள நிலையில் இராமேஸ்வரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடல் வழியாக பயணித்துக் கொண்டிருக்கும் போது இவர்கள் கடற்படையி னரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 02

## பிரணாப் முகர்ஜியிடம் டெசோ தீர்மானங்கள் கையளிப்பு

(புதுடெல்லி)

தி.மு.க. பாராளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நக லை அளித்துள்ளார்.

இது குறித்து டி.ஆர்.பாலு வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியி ருப்பதாவது,

'தி.மு.க. தலைவர் கருணாநிதி யின் அறிவுரையின் பெயரில், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை டெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் 10 ஆம் திகதி சந்தித்து பேசினேன். 20 நிமிடம் நடந்த இந்த சந் திப்பின்போது, டெசோசார்பில், ஆகஸ்ட் 12ஆம் திகதி நடத்தப் பட்ட டெசோ மாநாடு மற்றும் அதன் விளைவுகள் பற்றி எடுத்து ரைத்தேன்.

மேலும் நானும், 02

## பேராசிரியர் வேல்நம்பியின் வீட்டிற்கு மலர் வளையம் வீச்சு

(வலிகாமம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரது வீட்டுக்கு நேற்றுமுன்தினம் அதிகாலை மலர் வளையம் ,எறியப்பட்டதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று நேற்று திங்கட்கிழமை பிற்பகல் செய்யப்பட்டுள்ளது. 02

## இலங்கை மீதான மனித உரிமை பிரேரணைக்கும் ஐ.நா.குழுவின் விஜயத்துக்கும் தொடர்பில்லை

(கொழும்பு)

**அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்**

ஏழு மாதங்களுக்கு முன்னர், இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேர வையில் நிறைவேற்றப்பட்ட பிரேர ணைக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையா ளரின் அலுவலக அதிகாரிகளின் விஜயத்திற்கும் எந்தவித தொடர்பு மில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் 02

## அமெரிக்க பாராளுமன்றத்தில் இலங்கை விவகாரம்

அமெரிக்க பாராளுமன்றில் இலங்கை விவகாரம் தொடர்பிலான பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரேரணை இந்த வாரத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

உள்ளக ரீதியான புனர்வாழ்வு, புனரமைப்பு, 02

**தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்**

# மனித உரிமை ஆணையத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மை அவசியம்

## - இலங்கை கோரிக்கை

மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்துக்கு நிதி வழங்குவது, ஆட்களை நியமிப்பது தொடர்பில் வெளிப்படைத் தன்மையை கூட்டுவதற்கு நாடுகள் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டுமென இலங்கை அரசாங்கம் கூறியள்ளது.

இந்த நிறுவனத்தின் நற்பெயர், வினைத்திறன், சுயாதீனம் என்பவற்றை அதிகரிப்பதற்கு நிதி வழங்கல், ஊழியர் நியமனம் என்பவற்றில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பது அவசியமென இலங்கையின் நிரந்தர பிரதிநிதியான ரவிநாத் ஆரியசிங்க குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைப் பேரவையில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா முறைமையுடன் தொடர்ச்சியாக இணைந்துபோகும் இலங்கையின் கொள்கைக்கு அமைய இலங்கை அண்மையில் அடைந்து வரும் முன்னேற்றம் பற்றி பேரவையில் இலங்கைத் தூதுவர் எடுத்துரைத்தார். இலங்கையின் ஜனநாயக முறை யின் கீழ் சிறப்பு அண்மையில் நடந்த மாகாண சபை தேர்தல்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார்.

நல்லிணக்க செயற்பாட்டில் சகல சமுதாயங்களின் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இலங்கை மக்கள் தமது பூரண ஆதரவை இத்தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தியிருப்பதாக அவர் கூறினார்.

## இலங்கை மீதான பிரேரணைக்கும்...(தொடர்)

தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே இந்த விஜயம் தீர்மானிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது தொடர்பில் கடந்த 12 மாதங்களுக்கு முன்னர் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும், குறித்த விஜயம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும் வரை ஒத்திவைக்கப்பட்டது எனவும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர்,

எந்த நாட்டு தூதுக்குழுவும் இலங்கைக்கு வரலாம். இவ்வாறான விஜயங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் ஒரு போதும் தடைவிதிக்கப்படமாட்டாது. ஏனெனில் வெளிநாட்டு தூதுக்குழுக்களின் விஜயத்தின் ஊடாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை நேரில் பார்வையிட முடியும்.

கடந்த குறுகிய கால பகுதிக்குள் இந்தியா, ஜப்பான், பிரித்தானியா மற்றும் கனடா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை விஜயம் மேற்கொண்டு நிலமைகளை நேரில் ஆராய்ந்துள்ளனர். இவ்வாறான நிலையிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலக உறுப்பினர்களின் விஜயம் அமையவுள்ளது. அவர்கள் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி, மீள்குடியேற்றம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை பார்வையிடுவார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நடைபெறவுள்ள அனைத்துலக ஆவர்த்தன மதிப்பீடு இலங்கைக்கு மாத்திரமானதல்ல. இது அனைத்து நாடுகள் மீது மேற்கொள்ளப்படும் ஒரு ஆய்வாகும். குறித்த மாநாடு இலங்கை தொடர்பானது என பொய் பிரச்சாரம் மேற்கொள்ளப் படுகின்றது.

இந்த மாநாட்டில் அனைத்து நாடுகளும் தங்கள் நாடுகளில் மேற்கொள்ளப்படும் விடயங்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிப்பார். அது போன்று இலங்கையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அண்மையில் நடைபெற்ற மாகாண சபை தேர்தல் அரசாங்கத்திற்கு முக்கியமான தாகும். இந்த மாகாண சபை தேர்தல் வெற்றி யின் மூலம் பொதுமக்கள் அரசாங்கத்துடனேயே உள்ளனர் என்ற செய்தி வெளிநாடுகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாகண சபை தேர்தலை விட இம்முறை அதிக ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் கைப்பற்றியுள்ளது. தேர்தல் வெற்றிகளின் மூலம் அரசாங்கம் பலப்படுத்தப்படுகின்றது. யுத்தம் நிறைவடைந்தாலும் பொருளாதார யுத்தம் இன்னும் நிறைவடையவில்லை. இதற்காக தொடர்ந்தும் உழைத்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

இம்மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ இந்தியா வுக்கான விஜயத்தினை மேற்கொள்ள வுள்ளார். இந்த விஜயத்தில் செப் டெம்பர் 20ஆம் திகதி இந்திய புதிய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி,. பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் உள்ளிட்ட பலரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். அத்துடன் 21ஆம் திகதி ஆந்திர பிரதேசத்திலுள்ள சாஞ்சியில் அமைக்கப்படவுள்ள சர்வதேச பௌத்த பல்கலைக்கழ கத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார். தமிழ் நாட்டுக்கு இலங்கையர் கள் விஜயம் மேற்கொள்வது தொடர் பில் தற்போது விதிக்கப்பட்டுள் ளது புயண எச்சரிக்கை நிலையா னதல்ல. அங்குள்ள நிலைமைகள் ஆராயப்பட்ட பின்னர் இந்த பயண எச்சரிக்கை நீக்கப்படலாம் என்றார்.

## இந்தியாவிருந்து...(தொடர்)

படகொன்றை 70 ஆயிரம் ரூபா வடகைக்கு அமர்த்தி இவர்கள் இலங்கை நோக்கிப் பயணித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடந்த 2007 ஆம் ஆண்டு யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இந்தியாவுக்கு விமானம் மூலம் சென்றவர்கள் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் வசாவிளான், கொடிகாமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக எரிக்பெரேரா மேலும் தெரிவித்தார்.

## பிரணாப்...(தொடர்)

மு.க.ஸ்டாலினும், அமெரிக்கா சென்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரை நியூ யோர்க்கில் சந்தித்து பேசுவது குறித்தும், ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரைச் சந்தித்து பேசும் திட்டம் குறித்தும் ஜனாதி பதி பிரணாப் முகர்ஜியிடம் எடுத்துரைத்தேன்.

டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலையும் அவரிடம் வழங்கினேன் என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் மு.கா....(தொடர்)

அறிவித்துள்ளது.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்ச ருமான மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன கூறுகையில், தனித்துப் போட்டியிட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத் துடன் இணைந்தே கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைக்கவுள்ளது.

இது குறித்த பேச்சுவார்த்தையை அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்ளுடன் மேற்கொள்ளப்பட்டு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் மூன்று மாகாண சபைகளுக்குமான வெற்றிபெற்ற வேட்பாளர்களின் விபரங்கள் இன்று வர்த்தமானியில் வெளியாகவுள்ளது. இதன்பின்னர் முழுமையான அறிவிப்பை அரசாங்கம் வெளியிடும் என்றார்.

## அமெரிக்க...(தொடர்)

நல்லிணக்கம் என்பவற்றின் மூலமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைத் தொடர்பான இந்தப் பிரேரணை சில நேரங்களில் நிறைவேற்றப்படக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றல், வடக்கு உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல் போன்ற விவகாரங்களில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றமடைந்துள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதனை வலியுறுத்தும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் மூலம் காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உத்தேச தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொண்டமானாற்றில்...(தொடர்)

வடக்கு சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் தலைவர் அன்ரன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் 3பேர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பேராசிரியர்...(தொடர்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பேராசிரியருமான வேல்நம்பி என்பவரது வீட்டின் மீதே இந்த மலர் வளையம் எறியப்பட்டுள்ளது.

மலர் வளையம் எறியப்பட்டமைக்கான காரணம் தெரியாத போதிலும் இந்தப் பயமுறுத்தல் ஏன் விடப்பட்டுள்ளது என்பது தெரியவராததுடன் இந்நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் பற்றிய விபரங்கள் தெரியாததாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த காலத் தேர்தல்களின் போது இத்தகைய மலர் வளையத்தை வீட்டின் முன் வைத்தல் மற்றும் எறிந்துவிட்டுப் போதல் போன்ற நடவடிக்கைகள் குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும் தற்போது குறிப்பிட்ட விரிவுரையாளரின் வீட்டுக்கு மலர் வளையம் எறியப்பட்டமைக்கான காரணம் எதனையும் இத்தகைய செயலில் ஈடுபட்டோர் அறிவிக்கவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி மலர்வளையம் வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

## தமிழ்க் கைதிகளின்...(தொடர்)

இப்பிரார்த்தனை நிகழ்வில் சிறைகளில் உள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்காக சர்வதேச சமூகம் மற்றும் இலங்கை அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 1008 தேங்காய் உடைத்துச் சிறப்புப் பிராத்தனையும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி உள்ளிட்ட தென்னிலங்கை ஜனநாயக முற்போக்குச் சக்திகளும் கலந்து கொள்ள உள்ளவுள்ளதாக தெரிவித்துள்ள ஏற்பாட்டுக்குழுவினர் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களும் காணாமல் போனோரின் உறவினர்களும் கலந்து கொள்ள உள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

## இறுதித் தீர்மானமின்றி...(தொடர்)

முடிவுகளும் எட்டப்படாத நிலையில் இக்கூட்டம் நிறைவடைந்திருப்பதாக முஸ்லிம் காங்கிரஸின் ஊடக ஆலோசகர் கலாநிதி. ஏ.ஆர்.ஏ.ஹாபீஸ் தமிழ் நாதத்திற்கு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மு.க. தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தவிசாளர் பஷீர் சேகுதாவுத், செயலாளர் நாயகம் ஹசன் அலி எம்.பி. மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைஸல் ஹாசிம், ஹரிஸ், முத்தலிப் பாஃருக், தௌபீக், அஸ்லம், ஆகியோரும் நடைபெற்று முடிந்த தேர்தலில் வெற்றிபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் உலமாக்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார். எனினும் இந்தக் கூட்டத்தில் எந்தத் தீர்மானங்களும் எட்டப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய ஊடக ஆலோசகர் கலாநிதி ஏ.ஆர்.ஏ. ஹாபீஸ், யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான ஆலோசனைகள் தொடர்ந்தும் இடம் பெற்றுவருவதாக குறிப்பிட்டார்.

இதே வேளை ஆட்சியமைப்பதற்கான ஆலோசனை கோரி தமிழரசுக்கட்சி சார்பில் இரா. சம்பந்தன் எம்.பி. யும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தரப்பில் ஜனாதிபதி சார்பாக சயின் வாஸ் குணவர்த்தன எம்.பி. யும் மு.கா.வுடன் ஏற்கனவே பேசியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பிற கட்சிகளுடன் கூட்டு...(தொடர்)

தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் நவநீதம்பிள்ளை உட்பட மேற் குலக நாடுகளின் முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன.

பிரிவினைவாதத்திற்கு பொது மக்கள் அங்கீகாரம் வழங்கவில்லை.

இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அக் கட்சி தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று திங்கட் கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இங்கு உரையாற்றிய அக்கட்சியின் பேச்சாளர் பியசிறி விஜேநாயக்க கூறுகையில் தேசிய சுதந்திர முன்னணி திருகோணமலையில் தனித்துக் போட்டியிட்டு விசேட வெற்றிகளைக் கண்டுள்ளது.

பிரதான வேட்பாளர் ஜயந்த விஜேசேகரவின் வெற்றிக்காக ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி. அதே போன்று பொது மக்கள் அரசாங்கம் மீது வைத்துள்ள நம்பிக்கையும் வெளிப்பட்டுள்ளது. இந்த மக்கள் ஆணை சர்வதேசத்திற்கு சிறந்த பதிலடியாகவே அமைந்துள்ளது. வடகிழக்கை மீண்டும் இணைக்க வாக்களிக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களை கோரியது. மறுபுறம் முஸ்லிம்களுக்கு தனி பிராந்தியம் அமைக்க வாக்களிக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரசாரம் செய்தது.

இனவாத பிரசாரத்தை மேற்கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளையும் மக்கள் புறக்கணித்துள்ளனர்.

சர்வதேச புலி ஆதரவாளர்களினதும் இந்தியாவினதும் ஐ.நா.உள்ளிட்ட மேற்குலக சக்திகளின் சூழ்ச்சி தோல்வி கண்டுள்ளது. ?னவே அரசாங்கம் சரியான வழியினை தெரிவு செய்து பயணிக்க வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தில் உள்ள உறுப்புக் கட்சியாகும். வெற்றியின் பின்னர் தேசிய சுதந்திர முன்னணியைப் போன்று அரசாங்கத்திற்கே ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டட நிர்மாண பணிகள் பூர்த்தி

## 29இல் கையளிப்பு

ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டிடப் பணிகள் பூர்த்தியான நிலையில், எதிர்வரும் 29ஆம் திகதி வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக ஜப்பானின் இலங்கைக்கான வதிவிடப் பொறியியலாளர் ஸ்வோர் என்டோ தெரிவித்தார்.

ஜப்பான் அரசாங்கத்தின் 2.9 பில்லியன் நிதியுதவியில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தகாலம் எதிர்வரும் 29ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. சில வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான பணிகள் தற்போது நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் 29ஆம் திகதி வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ள இப்புதிய கட்டடத்தை யாழ்.வைத்தியசாலையின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டனர்.

இப்புதிய கட்டிடத்தொகுதியில் கதிரியக்கப் பிரிவு, ஈ.சி.ஜி, சத்திரசிகிச்சைக்கூடம் ஆகியன உள்ளடங்குவதாகவும் எதிர்வரும் ஜனவரி மாதம் இக்கட்டடத் தொகுதி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் யாழ்.வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் பவானந்தராஜா கூறினார்.



# போலி வைரத்தையே சீனப் பிரஜை விழுங்கினார்

சீன பிரஜையொருவரினால் விழுங்கப்பட்டதாகக் கூறப்படும் வைரம் போலியான வைரமென்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண ங்கள் அதிகாரசபை இதனை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சியின் போது, இச்சீனப் பிரஜை இவ்வைரத்தை திருட முயன்று விழுங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டார். இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டைனமட் வைத்து மீன்பிடித்த 3 பேர் கடற்படையினரால் கைது

யாழ்.குடா கடற்பரப்பில் சட்டவிரோத வெடிபொருட்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட மூன்று மீனவர்கள் கடற்படையினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.குருநகரைச் சேர்ந்த தந்தை ஒருவரும் மற்றும் மகன்மார் இருவருமே 'டைனமைட்' வெடி பொருளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் பாலதீவு கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட வேளையில் கைதாகியுள்ளனர்.

ரோந்து சென்ற கடற்படையினரால் இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து டைனமைட், சட்டவிரோத வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டு யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று இம் மூவரும் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நல்லூர் வடக்கு வீதியில் புதிய கோபுரம்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத்தில் வடக்கு வீதியில் புதிய கோபுரம் அமைப்பதற்கான நடவடிக்கை நல்லூர் கந்தசாமி ஆலய நிர்வாகத்தினாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்பகட்டப் பணிகள் கடந்த திருவிழா காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் கட்டுமானப்பணிகள் நவம்பர் மாதம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும்,

தெற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கோபுரத்தை போன்று வடக்கு வீதியிலும் கோபுரம் அமைக்கப்படவுள்ளதாக நல்லூர் கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# நியமன கடிதங்கள்

(வலிகாமம்)

பட்டதாரிப் பயிலுனர்களாக இருப்பவர்களில் ஒரு தொகுதியினருக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இவர்கள் பட்டதாரி பயிலுனர்களாக நியமனம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பொருளியல் வர்த்தகம் போன்ற துறைகளைச்சோந்த பட்டதாரிகள் பொருளாதார அமைச்சினால் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான கடமைப்பட்டியலும் இணைத்து நியமனக் கடிதங்கள் தனித்தனியாக குறிப்பிட்ட பட்டதாரிகளின் முகவரிகளுக்கு கடமையை பொறுப்பேற்க்கும்படி அனுமதிக்கப்பட்டுள்ளன.

# இங்கிரியவில் ஒருவர் சுட்டுக் கொலை

இங்கிரிய-கஹலகும்புர ரத்மல் கொட பகுதி சிற்றுண்டிச்சாலை ஒன்றில் அமர்ந்திருந்த ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# சட்டவிரோதமாக சிகரெட், மதுபானம் விற்பனை செய்த 12 பேருக்கு அபராதம்

சட்டவிரோதமாக சிகரெட் மற்றும் மதுபான வகைகளை விற்பனை செய்த 12 பேருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தினால் 17,500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நல்லூர், ஆனைக்கோட்டை, கல்வியங்காடு பகுதிகளில் மதுவரித் திணைக்களத்தின் யாழ்.அலுவலகப் பரிசோதகர்களினால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் இதன் போது 12 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். இந்த 12 பேரும் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

# பனை உற்பத்திப் பொருட்களுக்கு தென்னாபிரிக்காவில் சந்தை வாய்ப்பு

## பனை அபிவிருத்திச் சபை தகவல்

பனை சார் உற்பத்தி பொருட்களுக்கு தென்னாபிரிக்காவில் சந்தை வாய்ப்பினை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்வதாக தென்னாபிரிக்க குழுவினர் உறுதியளித்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க குழுவினர் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தினை சென்று பார்வையிட்டதுடன், தொழில் நுட்பம் மற்றும் அறிவு சார்ந்த உற்பத்தி பொருட்களையும் பார்வையிட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பனை சார் உற்பத்தி உணவுப் பொருட்கள் சித்த மருத்துவ குணாம்சம் கொண்டவை என தென்னாபிரிக்க குழுவினர் தெரிவித்ததுள்ளதுடன், யாழ்.மாவட்டத்தில் பனைசார் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தகவல்களை திரட்டிச் சென்றுள்ளனர்.

அத்துடன், பனைசார் உற்பத்திகளை கொள்வனவு செய்வதுடன், சந்தை வாய்ப்பினை ஏற்படுத்த நடவடிக்கை ஏடுப்பதாகவும் உறுதியளித்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தலைவர் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய இராசி பலன் (12.09.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 27 ஆம் நாள் புதன்கிழமை**

**நட்சத்திரம்** : பூசம் பின்னிரவு 3.45 வரை அதன் பின் ஆயிலியம்
**திதி** : ஏகாதசி காலை 10.16 வரை. அதன் பின் துவாதசி
**சுபநேரம்** : 4.33 - 6.03
**இராகுகாலம்** : 12.03 - 1.33
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)
**மேடம்** : இடமாற்றம், குடும்பத்தில் குழப்பம், வீண் விரயம்
**இடபம்** : காரிய அனுகூலம், சகோதர உதவி, சிறுதூரப் பிரயாணம்
**மிதுனம்** : பொருள் வரவு, குடும்ப சுகம், வாக்கு பலிதம்
**கடகம்** : மனக்கவலை, பொருட் செலவு, நஷ்டம்
**சிங்கம்** : பொருள் நஷ்டம், பிரயாணக் கஷ்டம், தூக்கமின்மை
**கன்னி** : தொழில் இலாபம், போசன சுகம், இனசனக் கொண்டாட்டம்
**துலாம்** : காரிய சித்தி, தொழில் முன்னேற்றம், குறைந்த வருமானம்
**விருச்சிகம்** : தொழில் நன்மை, பூமிலாபம், தந்தை வழி உதவி
**தனுசு** : கடன் தொல்லை, ரோக பயம், வழக்கு விவகாரம்
**மகரம்** : மனமகிழ்ச்சி, திடீர் பயணம், நண்பர் உதவி
**கும்பம்** : பணக்கஷ்டம், மனக்கவலை, எதிரிகள் தொல்லை
**மீனம்** : பொருள் வரவு, தெய்வ சிந்தனை, புத்திரரால் நன்மை

- **ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# மாணவனை வீடுதேடிச் சென்று குத்திக் கொன்ற இளைஞன்

புத்தளத்தில் 16 வயதான மாணவரொருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

புத்தளம் மரிக்கார் வீதியில் வசிக்கும் முஹம்மட் பாறூக் முஹம்மட் அல்தாப் (வயது 16) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 9.30 மணியளவில் இம்மாணவனின் வீட்டுக்கு வந்த 27 வயதான இளைஞரொருவர் இம்மாணவனை கத்தியால் குத்தியதாக இம்மாணவனின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவருக்கிடையே காணப்பட்ட தனிப்பட்ட தகராறே இச்சம்பவத்திற்கு காரணமாக இருக்கலாமென்று தாம் எண்ணுவதாக உறவினர்கள் குறிப்பிட்டனர்.

படுகாயமடைந்த மாணவன் உடனடியாக புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தேக நபரைக் கைதுசெய்துள்ள புத்தளம் பொலிஸார் அவரிடம் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, பல்வேறு விவகாரங்களுக்காகவும் சிறுவர்களும், மாணவர்களும் கொல்லப்படுவதும், தற்கொலை செய்து கொள்ளுவதும் நாடெங்கிலும் அதிகரித்துள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வேலணையில் முப்பரிமான நூலகக் கண்காட்சியும் பரிசளிப்பு நிகழ்வும்!

அரசின் நிதி ஒதுக்கீடு இல்லாது எந்தவொரு பிரதேசசபையும் அபிவிருத்தி செயற்பாடுகளை முழுமையாக செயற்படுத்த முடியாதென ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தீவக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேசசபையினால் உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட முப்பரிமான நூலகக் கண்காட்சி அறிமுக வைபவமும் கையெழுத்து சஞ்சிகைக்கான பரிசளிப்பு விழாவும் நேற்று வேலணை தேவா கலையரங்கில் பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா (போல்) தலைமையில் நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எத்தகைய அபிவிருத்தி பணி-களை முன்னெடுப்பதானாலும் அரசின் நிதிப் பங்களிப்புடனேயே மேற்கொள்ள முடியும். வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்தில் சகல பிரதேசங்களுக்கும் மின்சாரத்தை வழங்கி வருகின்றோம்.

வடக்கின் ஆயிரம் கோடி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபைக் கும் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள் ளுவதற்கு தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.




இந் நிகழ்வில் யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.பா.ஜெயகரன், வேலணைப் பிரதேச செயலர் திருமதி.சதீஷன் மஞ்சுளாதேவி யாழ். பல்கழைக்கழக பிரதம நூலகர் செல்வி.சிறி.அருளானந்தம் வேலணைப் பிரதேச சபை செயலாளர் திரு.செ.ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேலணையில் வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் ஐநூறு ரூபா உதவி

(உடுவில்)

வேலணை பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் 96 மாணவர்களுக்கு கற்றல் நன கொடையாக மாதாந்தம் ஐநூறு ரூபா வழங்கப்படவுள்ளது.

இவ் வருடம் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி புகைத்தல் எதிர்ப்பு தின கொடி விற்பனை மூலம் சேகரிக்கப்பட்ட நிதியே இவ்வாறு மாணவர்களுக கான கற்றல் நன்கொடையாக வழங்கப்படவுள்ளன.

இப்பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு வழி சமைக்கும் வகையில் 96 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோர் அபிவிருத்தி மன்றத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## யாழ் மாநகரசபை செயலாளர், அதி சிறப்பு வகுப்பிற்கு பதவி உயர்வு

(பருத்தித்துறை)

யாழ் மாநகரசபை செயலாளர் திருமதி ருக்மணி சத்தியானந்தன் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்பு வகுப்பிற்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். திறமை வழிப்பரீட்சையின் அடிப்படையிலேயே இவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

கொழும்பு கல்வித் திணைக் களத்தில் 1977ஆம் ஆண்டு நியமனம் பெற்ற இவர் கல்வியமைச்சு, கல்விச்சேவை ஆணைக் குழு, யாழ் கல்வித் திணைக் களம் ஆகியனவற்றில் பணியாற்றி வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு நிதி உதவியாளராக நியமிக்கப்பட்டுப் பணியாற்றியுள் ளார். பின்னர் பருத்தித்துறை நகர சபையில் நிர்வா உத்தியோகத்தராகப் பணியாற்றி யாழ் மாநகர-சபைக்கு செயலாளராக நியமனம் பெற்றார்.

இவருக்கு 01.01.2010 முதல் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி சிறப்பு பதவி வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## ஆட்கடத்தலில் ஈடுபட்ட இலங்கையருக்கு எதிராக கர்நாடகாவில் வழக்கு

கர்நாடகா - மங்களுர் வழியாக இலங்கையர்கள் அவுஸ்திரேலியா செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட 13 ஆட்கடத்தல்காரர்களின் வழக்கு மங்களுர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

கடந்த சனிக்கிழமை சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 84 அகதிகள் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, குறித்த 13 ஆட்கடத்தல்காரர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு படகினை விற்பனை செய்த ஒருவரும் கைது செய்யப் பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த 13 பேரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவர்களை தடுப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த பொலிசார் அனுமதி கோரியிருந்தனர்.

இதே வேளை கைதான ஏனைய அகதிகள் அனைவரும் சென்னையில் உள்ள அகதிகள் புனர்வாழ்வு ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தரைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

## வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு நன்கொடை

(உடுவில் நிருபர்)

நல்லூர் பிரதேச சபையினால் மாணவர்களுக்கு நன்கொடை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நல்லூர் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் பாதுகாப்பில் வாழ்ந்து வரும் 2011ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் 2010 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல் கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கும் நன்கொடை வழங்குவதற்கு நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பொருத்தமான மாணவர்கள் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று தேவையான ஆவணங்களுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் எட்டாம் திகதிக்கு முன் தவிசாளர், நல்லூர்பிரதேச சபை, கொக்குவில் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள ளது.

## ஞானசம்பந்தர் கலாமன்ற வெள்ளி விழாவும் மலர் வெளியீடும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் வெள்ளி விழாவும் மலர் வெளியீடும் மன்ற அரங்கில் மன்றத் தலைவர் கே.பி.ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

தலைவர் ஆனந்தநடேசன் வெள்ளிவிழா மலரை வெளியிட்டு வைத்தார். பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் கே.கே.யோகநாதன் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் சட்டத்தரணி சபா. ரவீந்திரன் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுனாலினி விஜயரத்தினம், பருத்தித் துறை பிரதேச கலாசார உத்தியோகத்தர் செல்வி செல்வசுகுணா சேனாதிராஜா, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராஜா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாற்றினார்.

தவில் வித்துவான் கே.பி.சின்னராஜா மன்ற வளர்ச்சிக்கு அயராது உழைத்த மன்ற முகாமைத் துவ ஆலோசகர் எஸ்.இராஜரட ணம் திருமதி யோகரஞ்சிதம் இராஜரட்ணம் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கப்பட்டனர்.

பாலர் கதம்பம், பேச்சு, மிருதங்க இசை, நடனம், ஓகன் இசை, இன்னிசை வாத்திய பிருந்தா ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. மன்றச் செய லாளர் பா.இரகுவரன் நன்றியுரை நிகழ்த்தினார்.







வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்காக வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் நடாத்தப்பட்ட இலவச வைத்தியசேவை முகாமை, லயன்ஸ் எஸ்.கதிரமலை மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் வைத்திய சேவைகள் நடைபெறுவதையும் இரத்ததானம் நடைபெறுவதையும் படங்களில் காணலாம். (பருத்தித்துறை நிருபர்)



வட்டு. வடக்கு பிரமனாட்சித் தோட்டம், அருள்மிகு கற்பக பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் முதல் நாளான நேற்று கொடியேற்ற திருவிழா நடைபெறுவதை முதல் இரண்டு படங்களிலும், கற்பகப்பிள்ளையார் பக்தர்களுக்கு அருட்காட்சி அளிப்பதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: ரமணன்)

சட்டவிரோத கடல் பயணம்:

# அவுஸ்திரேலியா அனுப்புவதாக கூறி ஏமாற்றும் கும்பல்: நம்ப வேண்டாம்

## தமிழக பொலிஸார் அறிவிப்பு

இலங்கை அகதிகள் முகாமில் இருப்பவர்கள், சட்ட விரோதமாக கடல் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும் என, தமிழக நுண்ணறிவுப் பிரிவு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

தமிழகத்தில், இலங்கை அகதிகளுக்காக, 128 முகாம்கள் உள்ளன.

அங்குள்ள இலங்கைத் தமிழர்களை, வேலை வாங்கித் தருவதாகக் கூறி, முறையான ஆவணங்கள் இன்றியும், சட்ட விரோதமாகவும், கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல, சிலர் முயற்சிக்கும் சம்பவங்கள் தொடர்கின்றன.

இந்நிலையில், அகதி முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர் களுக்கு, நுண்ணறிவுப் பிரிவு பொலிஸ் தலைவர் அபாஷ் குமார், சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: இலங்கைத் தமிழர்கள், அவுஸ்திரேலியாவில் உள்ள, கிறிஸ்துமஸ் மற்றும் கொக்கோ தீவுகளுக்கு, பாஸ்போர்ட், விசா இல்லாமல், படகுகள் வாயிலாக செல்ல முயற்சிப்பதாக, காவல் துறைக்கு தகவல் வந்துள்ளது.

சர்வதேச கடலில், இதுபோன்ற சட்ட விரோத பயணங்கள், குற்றச் செயலாக கருதப்படுகிறது. போலி முகவர்கள் மற்றும் இடைத்தரகர்கள் சிலர், அகதிகள் முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களிடம் பணம் வசூலித்து, வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி ஏமாற்றுகின்றனர்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் கும்பல்களை கட்டுப்படுத்த, முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, சம்பந்தப்பட்ட போலி முகவர்களை கண்டுபிடித்து, பொலிஸார் கைது செய்கின்றனர்.

இலங்கைத் தமிழர்கள், சட்ட விரோதமாக கடல் பயணம் செய்வதை தவிர்க்க, போலி முகவர்களிடம் ஏமாறாமல் இருக்க, எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோர் அல்லது அனுப்ப முயற்சிப்போர் குறித்து, தகவல் அறிந்தவர்கள், 044-28447739 மற்றும் "கியூ" பிரிவு கட்டுப்பாட்டு அறை தொலைபேசி: 94444 00130 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். சரியானதகவலுக்கு, வெகுமதி அளிக்கப்படும் பெயர் ரகசியம் காக்கப்படும். இவ்வாறு, சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவளை, அவுஸ்திரேலியா செல்ல முயன்ற, ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அகதிகள் முகாமை சேர்ந்த, 84 அகதிகளை, கர்நாடக மாநிலம் மங்களூரில், பொலிஸார் பிடித்து, சென்னைக்கு அழைத்து வந்தனர்.

ஒரு லட்சம் ரூபாயை, முகவர்கள் முன்பணமாக வாங்கிக் கொண்டதாக, இவர்கள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து, அகதிகளை ஏமாற்றியவர்கள் யார் என, கியூ பிரிவு பொலிஸார் விசாரிக்கின்றனர்.

# பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, கல்லடியில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மேற்படி சடலத்தை நேற்று மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் வசித்துவந்த 37 வயதான பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி பெண் மரணம் அடைந்தமைக்கான காரணம் குறித்து சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்திய பொலிஸார் அப்பகுதியில் தடயவியல் ஆய்வுகளிலும் ஈடுபட்டனர்.

மேலதிக மரண விசாரணைகளுக்காக மேற்படி சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# சட்டவிரோத மின் பாவனை: 8 பேர் பொலிஸாரால் கைது

யாழ். நகரப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற எட்டுப் பேர் நேற்று (11) காலை கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ். நகரப் பகுதியில் மின்சார சபை அதிகாரிகளுடன் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின்மானியில் மாற்றங்கள் செய்தல் மற்றும் தாமாக மின்வயர்களை இணைத்து சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களும் இதன் போது இனங்காணப்பட் டதாக அவர் தெரிவித்தார். யாழில் சட்ட விரோத மின்சாரம் பெறும் நடவடிக்கை அதிகரித் துள்ளமையினால் பொலிஸாரும் மின்சார சபையினரும் இணைந்து சட்ட விரோத மின் பாவனையாளர் களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவர்கள் அனைவரும் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதி காரி சமன் சிகேரா மேலும் தெரிவித்தார்.

# கண்டிக்கு ஹெரோயின் கடத்திய பெண் கைது

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் கண்டியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் வசம் இருந்து 13 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் கொழும்பில் இருந்து கண்டிக்கு ஹெரோயின் கொண்டு சென்றதாக தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப்படுகிறார்.

# வவுனியாவில் பாரதியார் நினைவு தினம் அனுஷ்டிப்பு

புரட்சிக்கவிஞர் பாரதியாரின் நினைவு தினம் நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா கலை இலக்கிய மன்றத்தினால் அனுஷ்டிக்கப்பட்டது.

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் வவுனியா குருமண்காட்டுச்சந்தியில் உள்ள பாரதியார் சிலைக்கருகில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு பாரதியாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்ததுடன் பாரதியார் தொடர்பான உரையினையும் ஆற்றினர்.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ். சந்திரகுமார்,

"வவுனியாவில் உள்ள பெரியார்களின் சிலைகளை பராமரிப்பதற்கு பலர் ஆர்வம் கொண்டுள்ளனர்.

எனவே அவற்றை வவுனியா நகரசபை ஆர்வமுள்ளவர்களிடம் கையளித்து அவற்றை பராமரிப்பதுடன் பெரியார்களின் நினைவு தினத்தில் அவர்களை நினைவு கூர்வதற்கான ஒழுங்கமைப்பையும் செய்து கொள்ளவதன் ஊடாக எமது எதிர்கால சந்ததிக்கு எமது கலை கலாசாரம் தொடர்பில் தெரிந்து கொள்ள வசதி ஏற்படும் என தெரிவித்தார்.





தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி புதன்கிழமை

# மாகாண தேர்தல் முடிவுகள் மத்தியில் ஆளும் தரப்புக்கு நல்லதொரு சமிக்ஞை

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதிக ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களில் அதிகாரத்தைத் தன்வசமாக்கியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. சப்ரகமுவ மாகாணத்தில் 28 ஆசனங்களையும், வட மத்திய மாகாணத தில் 21 ஆசனங்களையும், கிழக்கு மாகாணத்தில் 14 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.

வட மடத்திய மாகாணம் மிக அதிகளவில் சிங்கள மக்களையே கொண்டது. சப்ரகமுவ மாகாணத்தில் கணிசமான அளவு தமிழ் மக்களும் வாழ்கிறார்கள். கிழக்கில் மூவின மக்களும் பரந்தும், செறிந்தும் வாழ்கிறார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இ.தொ.கா., தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை தனித்துப் போட்டியிட்டமை இத் தேர்தலில் முக்கிய அம்சமாகும். இதேபோன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளான இடதுசாரிகளும் பிரிந்து நின்று சோஷலிச முன்னணி என்று ஓர் அணியாகக் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் போட்டியிட்ட போதிலும், அவர்களால் ஓர் ஆசனத்தைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை. மத்திய அரசில் அமைச்சர்களாக அங்கம் வகிக்கும் சமசமாஜக் கட்சியின் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சியின் டியூ குணசேகர ஆகியோர் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்திருந்தனர். அரசின் பங்காளிக் கட்சியென்றாலும் அரசைக் கடுமையாக விமர்சித்ததன் மூலம் ஐக்கியமும், போராட்டமும் என்ற ஜனநாயகப் பண்பை இவர்கள் வெளிக் காட்டியிருந்தனர். ஆனால், மற்றொரு பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் சற்று மிகையாகவே தேர்தல் மேடைகளில் இனவாதப் பிரசாரங்களில் ஈடுபட்டார். இதனால் சக பங்காளிக் கட்சிகளிடம் வாங்கியும் கட்டிக் கொண்டார். இதன் பின்னர் அடக்கி வாசிக்கவும் கற்றுக் கொண்டார்.

மூவின மக்களும் பரந்தும், செறிந்தும் வாழும் மாகாணம் கிழக்கு என்பதால், தேர்தல் பிரசார காலத்தில் படுபயங்கரமான இனவாதப் பிரசாரங்களின் குவிவு மையமாக அந்த மாகாணம் திகழ்ந்தது. பதின்மூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வை எதிர்க்கும் ஜே.வி.பி.யினால் சோபிக்க முடியாமல் போய்விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தத்தமது இனத்தின் பேரால் இயங்கும் பிராந்தியக் கட்சிகள். தேசிய நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் பார்க்க இனம் சார்ந்த பிரச்சினைகளையே முக்கியத்துவப்படுத்தி தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்துச் சென்றன. வகுப்புவாத வாந்திகளை இந்தக் கட்சிகள் எடுத்தன என்பதை மறுக்கமுடியாது. வாக்குச் சேகரிக்கும் இந்தத் தந்திரோபாயம், இறுதியில் இவர்களின் காலை வாரிவிட்டது. தேசிய அளவிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 ஆசனங்களையும், பிராந்தியக் கட்சிகளான தமிழத் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் முறையே பதினொரு ஆசனங்களையும், ஏழு ஆசனங்களையும் கைப்பற்றின. இந்தக் கட்சிகளின் இனவாதப் பிரசாரங்களுக்குப் பதில் கொடுக்கும் வகையில்தான் ஜனாதிபதியின் தேர்தல் பிரசார உத்திகள் அமைந் திருந்தன.

தமிழர்களும் முஸ்லிம்களும் வெவ்வேறான தேசிய இனங்களைச் சார்ந்தவர்கள் என்பதை மறுக்க முடியாது. தமது இனம் சார்ந்த பிரச்சினைகளின் தீர்வுக்காக இவர்கள் குரல் கொடுப்பதில் தவறில்லை. ஆனால் "மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்க வேண்டும், அப்போதுதான் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கும்" என்று மக்களை உசுப்பிவிடும் பாணியில் பேசியவர்களுக்கு இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட வேண்டும் என்பதுதான் விருப்பமா? மூன்றாம் தரப் பாணியில் பேசி வாக்குகளைச் சேகரிக்க முயன்ற இவர்களை "நபுஞ்சகர்கள்" என்று கூறினால் தவறில்லை.

நாட்டில் தேசிய இனங்களின் ஐக்கியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு பொறிமுறையே மாகாண சபைகள். அதாவது அதிகாரப் பகிர்வுக்கான ஓர் ஆயுதம் அது. ஆயுதங்கள் தோற்ற பின்னராவது அதிகாரங்கள் சகல இன மக்களுக்கும், சகல பிராந்தியங்களுக்கும் பகிரப்படுவதன் மூலம்தான் இந்த நாட்டில் சமாதான சகஜீவன வாழ்க்கை முறையைக் கட்டியெழுப்ப முடியும். ஒருவகையில் இதனைப் பிராந்திய சுயாட்சி என்றும், அரைவாசிச் சமஷ்டி முறை என்றும் கூட வகைப்படுத்த முடியும்.

மாகாண சபைகளை ஏற்படுத்திய பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் அமுலுக்கு வந்து இருபது வருடங்களுக்கு மேல் கடந்துவிட்டன. உண்மையில் வடக்கு, கிழக்கு பிரச்சினையின் தீர்வுக்காக - அதாவது அதிகாரப் பகிர்வுக்காகக் கொண்டு வரப்பட்டதே இந்த முறைமை. ஆனால் 1988ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை, சுமார் இருபது வருடங்களாக மாகாண சபைகள் வடக்கிலும் கிழக்கிலும் இயங்கவில்லை. கிழக்கில் 2008ஆம் ஆண்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. இரண்டாவது தடவையாக நடத்தப்பட்ட இந்தத் தேர்தலில் மத்தியில் ஆளும் கூட்டணியே மாகாணத்திலும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டதால், சுமுகமான தீர்வுக்கு இது நல்ல அத்திபாரமாக அமைவதற்கான வாய்ப்பு நிறையவே உண்டு. இனப் பிரச்சினை வெடித்து, ஆயுத மோதலாக உருவெடுத்த வடக்கிலும் விரைவில் தேர்தல் நடத்த அரசு முனைந்துள்ளமை பாராட்டுக்குரியது.

வடக்கும், கிழக்கும்தான் யுத்தத்தின் மையம். அவையே இனப் பிரச்சினையின் தோற்றுவாய். மாகாண சபைகளுக்கு அதிகரித்த அதிகாரங்கள் தேவையென்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. தேசிய நலன்களுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் பிராந்திய நலன்களும் முன்னெடுத்துச் செல்லப்படுமானால் பிரச்சினைகள் சூரியனைக் கண்ட பனி போல மறைந்துவிடும். அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, அர்த்தமே இல்லாத இன முறுகலையும், இன முரண்பாடுகளையும் அகற்றிவிடும். இந்த மூன்று மாகாண சபைகளின் தேர்தல் முடிவுகளும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு நல்லதொரு சமிக்ஞையைத் தந்திருக்கிறது. அதனை நாட்டை ஆளும் கூட்டணிக் கட்சிகள் தவறவிடக் கூடாது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# உலகமயமாதல்

இந்த சொல் தற்பொழுது அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. பொருளாதாரம், அரசியல், மருத்துவம், இலக்கியம் என பல துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பவற்றால் தான் முதல் முதலில் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் முன்வைக்கப்பட்டது. உலக பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு ஒரு சர்வதேச நிவாரணியாக முன்வைக்கப்பட்டது. யாரும் எங்கும் போகலாம், பெறலாம், எங்கும் எவ்வளவும் முதலீடு செய்யலாம் விரும்பிய பொழுது நிறுவனங்கள் மூடலாம், விரும்பிய விலைக்கு விற்கலாம், உலக சந்தையை நோக்கு பொருட்களை தகர்த்தலாம் என்பது கூறப்பட்டது. இந்த காலகட்டத்திலே பல்தேசிய கம்பனிகள் என்ற கோட்பாடும் முன்வைக்கப்பட்டது. யாரும் எவ்வளவும் பங்குகளை கொள்வனவு செய்யலாம் யாருக்கும் விற்கலாம். சிறிய கெம்பனிகளை வாங்கலாம் என்று ஒரு கொள்கையை முன்வைத்தார்கள். இந்த பல்தேசிய கம்பனிகள் எங்கு கூலி குறைவாக உள்ளதோ அங்கு தமது உற்பத்தி அமைப்புக்களை மாற்றின.

ஆரம்பத்திலே இந்தோனேசியா, மலேசியா நாடுகள், இந்த நிறுவனங்கள் சென்ற இடங்களாக காணப்படுகின்றது. பயிற்றப்பட்ட தொழிலாளர் எங்கு பெரிய உடன் சந்தை வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கே சென்றனர். இந்தியாவில் ர்ழனெய போன்ற கம்பனிகள் தங்கள் உற்பத்தி அமைப்புக்களை உருவாக்கின. 1986களில் உலகில் தொழில் செய்வோரது தொகை எல்லா நாடுகளிலும் சமனாக காணப்பட்டது. இப்பொழுது மூன்றாம் உலக நாடுகளில் 80% மேற்கத்திய நாடுகளில் சமவீதமும் காணப்படுகின்றது. மேற்கத்தய நாடுகளில் வேலை இல்லாத் திண்டாட்டம் தலைவ-ரித்தாடுகிறது.

இரண்டாம் உலகப் போருக்கு பின் சோசலிஸ முறைமையை ஏற்றுக் கொண்ட நாடுகள் 1990களில் முதலாளித்துவ பாதையை ஏற்றுக்கொண்டன. அங்கு இப்பொழுது இலவசக் கல்வித்திட்டம், மருத்துவ வசதி இல்லாமல் போய்விட்டது. ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி ஆகியோர் வேலை தேடி பிற நாடுகளுக்குச் செல்கின்றனர். பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாகவும் தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காகவும் வேறு நாடுகளுக்கு செல்கின்றனர்.

இந்த உலகம் மூன்றாக பிரிந்து முதலாவது மேற்கத தேய முதலாளித்துவ நாடுகள், இரண்டாவது சோசலிச நாடுகள், மூன்றாவது அணி சேராக கொள்கையை பின்பற்றும் ஆசிய ஆபிரிக்க, லத்தின், அமெரிக்க நாடுகள், சோசலிச நாடுகள் மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவுகின்றன. முதலாம் உலக நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் ஒரு தொழிற்சாலை ஆயினும் கட்டுவதற்கு உதவவில்லை. உலகத்திலே 44% ஆயுத தளபாடத்தை அமெரிக்கா உற்பத்தி செய்கிறது. அதை விற்பதற்கு மூன்றாம் உலகநாடு களில் பிரிவினை வாதம் என்ற கோட்பாட்டை உற்சாகப்படுத்தி வருகிறது. இதற்கு சாதகமாக மனித உரிமை ஆணைக்குழு

- சி.குமாரலிங்கம்.

சர்வதேச நீதிமன்றம் போன்ற ஐ.நா.அமைப்புக்களை உபயோகித்து உருகிறது. 2ஆம் உலக போருக்கு பின் உருவாகிய உன்னத தேசம் ஆறு நாடுகளாக பிரிந்தது. எல்லைச் சண்டை தொடர்ந்தது. ஐ.நா.படை சென்றது. ஒரே சாட்டு மக்கள் ஒன்றாக செயற்படுவதன் மூலம் எல்லோரும் அபிவிருத்தி அடையலாம்.

# ஷேக்ஸ்பியர் ரசித்த பறவைகள்

ஷேக்ஸ்பியர் தனது நாடகங்களில் 74 விதமான பறவை-களைப் பற்றி குறிப்பிட்டிருக் கிறார் என்கிறார்கள்.

இந்தப் பறவைகளை அடையாளம் கண்டு The birds of Shakespeare எனத் தனியே தொகுத்திருக்கிறார் Archibald Geiki.

நூறு ஆண்டுகளுக்கு முன்பாக ஷேக்ஸ்பியர் ஆர்வலரான Eugene Schieffelin ஷேக்ஸ்பியர் குறிப்பிட்டுள்ள பறவைகள் அத்தனையும் அமெரிக்காவிற்கு தேவை என்று முடிவு செய்து தனது சொந்தப் பணத்தில் அவற்றைச் சேகரித்து அமெரிக்காவில் உள்ள தேசியக் காப்பகங்களில் பறக்க விட்டிருக்கிறார், அவை இன்று பல்கிப் பெருகி அமெரிக்காவெங்கும் வசிக்கின்றன.

இன்று ஷேக்ஸ்பியர் குறிப்பிட்ட பல பறவை இனங்கள் அழியும் நிலையில் இருக்கி ன்றன, அதில் முக்கியமானது குருவிகள், 1852ம் ஆண்டு தான் குருவிகள் ஆஸ்திரேலியாவிற்கு அறிமுகமானது என்கிறார்கள், வடஅமெரிக்காவிற்கு Schieffelin 1851ல் வீட்டுக்குருவிகளை அறிமுகம் செய்திருக்கிறார்.

Hamlet, As You Like It, The Tempest ,Troilus and Cressida ஆகிய நான்கு நாடகங்களிலும் குருவிகள் பற்றி ஷேக்ஸ்பியர் எழுதியிருக்கிறார்

ஷேக்ஸ்பியர் போல எழுத்தாளர் கி. ராஜநாராயணன் அவர்கள் படைப்பில் இடம்பெற்றுள்ள பறவைகளையும் தனியே தொகுக்கலாம், அவ்வளவு எழுதியிருக்கிறார், கரிசல்காட்டில் வாழும் பறவைகளின் உலகம் பற்றி முழுமையாக எழுத்தில் பதிவு செய்திருப்பவர் அவரே,

காசியின் படித்துறைகளில் குருவிகளின் பெரும்படையொன்று ஒன்றையொன்று துரத்திப் போவதைப்



மாலைநேரங்களில் எல்லாப்படித் துறைகளிலும் இதைக் காண ஒரு கூட்டமே காத்துக்கிடக்கும் ,கங்கையின் மீது பறந்தபடியே அந்தக் குருவிகள் செய்யும் ஜாலம் அபாராமானது.

அலை அலையாக வானில் சுழன்று செல்லும் குருவிகளின் ஒன்றிணைந்த நடனத்தைக் காணப் பரவசமாக இருக்கும, இந்தக்குருவிகள் எங்கிருந்து வருகின்றன எங்கே செல்கின்றன என்று அறிய முடியாது, ஆனால் அவை வானில் சேர்ந்து நடனமாடுகின்றன, கீச்சிட்டுப் பறக்கின்றன, இன்று நகரங்களில் குருவிகளைக் காண்பது அரிதாகிவருகிறது, சிட்டுக்குருவிகள் அழிந்து வருவதற்கான முக்கிய காரணங்களாக சொல்லப்படுபவை, கூடு கட்டுவதற்கு வசதியான கட்டிடங்கள். கூரைகள் இல்லாமல் போனது. பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்ட உணவுதானியங்கள். காற்று மாசுபடல் மற்றும் ரசயானக் கழிவு புகையால் ஏற்படும் நெருக்கடி, வணிக காரணங்களால் இயற்கைச் சூழல் அழிக்கப்படுவது. மற்றும் செல்போன் டவரின் கதிரியக்கத்தால் ஏற்படும் அழிவு, உலகெங்கும் குருவிகள் அழிந்து வரும் இனமாக அறிவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன,

மார்ச் 20ம் தேதியை உலக சிட்டுக்குருவிகள் தினமாக்க் கொண்டாடுகிறார்கள், பெங்களூரில் உள்ள எனது நண்பர் சதீஷ் முத்துகோபால் இது குறித்து பழனியில் ஒரு விழிப்புணர்வு முகாம் நடத்த இருக்கிறார், இன்று இணையத்திலும் சிட்டுக்குருவிகள் குறித்த விழிப்புணர்வு தகவல்கள் பரவலாக வெளிப்பட்டு வருகிறது.

அழிந்து வரும் குருவிகளைக் காப்பாற்ற நாம் ஒவ்வொருவரும் முனைப்பு கொள்ள வேண்டும். குருவிகளுக்காக ஒரு சிறிய கிண்ணத்தில் நீர் வைக்கலாம், திறந்த வெளியில் தானியங்களை உணவாகப் போட்டுவைக்கலாம். இயற்கைச் சூழலை பாதுகாத்து அதற்கான வாழ்விடத்தை உருவாக்கித் தரலாம். அதைவிடவும் குருவிகளை வேட்டையாடல். துன்புறுத்தல் போன்றவற்றில் ஈடுபடாமல் இருக்கலாம்,

டெல்லியில் அடிபட்ட பறவைகளுக்கு உதவி செய்ய ஜெயின் மருத்துவமனை ஒன்றிருக்கிறது, அங்கே பல்வேறுவிதமான பறவைகள் உணவு மற்றும் குடிநீர் தரப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன, இது போன்ற பறவைகளுக்கான மருத்துவமனைகள் இந்தியாவெங்கும் அவசியம் தேவை என்றே தோன்றுகிறது.

# ‘ஈழத் தமிழர்’ என்பதில் தமிழ் பேசும் இலங்கையர் அனைவரும் உள்ளடங்கவில்லை

பேராசிரியர்: எம்.ஏ. நுஃமான்



எம்.ஏ. நுஃமான்(1944) ஈழத்திலிருந்து தமிழ்சார்ந்து செயற்படும் ஆளுமைகளுள் முக்கியமானவர். கவிஞராகவும் சிறுகதையாசிரியராகவும் வெளிப்பட்ட இவர் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோரின் திறனாய்வு மரபில்வைத்து எண்ணப்பட வேண்டிய விமர்சகர்களுள் ஒருவர். மார்க்சியக் கோட்பாட்டின்மீது நம்பிக்கை கொண்டவராக இருந்தபோதிலும் அவற்றின் பெயரால் இலக்கியத்தை எளிமைப்படுத்துவதற்கு அப்பால் நிற்கும் வெகுசிலரில் ஒருவர். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றார். இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். மரபான இலக்கியத்திலும் இலக்கணத்திலும் புலமை கொண்ட அவர் நவீன இலக்கியக் கோட்பாடுகள் பற்றி எழுதியும் விவாதித்தும் வருகிறார். தமிழில் கால்கொண்ட அமைப்பியல், பின்அமைப்பியல் பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை. தமிழ்மொழியோடு ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளையும் பயின்று தனது விமர்சனச் செயற்பாட்டை அமைத்துக் கொண்டவர். ஆங்கிலத்திலிருந்து பாலஸ்தீனக் கவிதைகள் உள்ளிட்டவற்றை மொழிபெயர்த்த இவரின் கவிதைகள், ஆங்கிலம், சிங்களம், கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆசிரியர், இணையாசிரியர், பதிப்பாசிரியர், இணைப் பதிப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் 25 நூல்களுக்குமேல் இவர் வெளியிட்டுள்ளார். ஈழத்தின் கடந்த தலைமுறையினரோடு படைப்புப் பணியைத் தொடங்கிய எம்.ஏ. நுஃமான் இளைய தலைமுறைப் படைப்பாளிகளோடும் உறவைப் பேணிவருபவர்.

தமிழில் இன்று எழுதும் விமர்சகர்களில் ஆக விவேகமான பார்வை இவருடையதுதான் என்று சுந்தர ராமசாமியால் குறிக்கப்பட்டவர் நுஃமான். உடனடிக் கவன ஈர்ப்பு நோக்கத்தில் இல்லாமல் நிதானத்தோடு செயற்படும் பொறுப்புமிக்க விமர்சகர். முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பிந்தைய ஈழத்தின் இன்றைய அரசியல் கலாச்சாரச் செயற்பாடுகள் பற்றித் தன்னுடைய கருத்துகளை இங்கே பகிர்ந்துகொள்கிறார்.

**ஈழ இலக்கியத்துக்குத் தனி அடையாளம் உண்டா?**

முதலில் ஈழம் என்னும் சொல்லின் பொருளைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். இன்று தமிழ்நாட்டிலும் தீவிரத் தமிழ்த் தேசிய உணர்வு கொண்ட இலங்கைத் தமிழர் மத்தியிலும் ஈழம் என்பது தமிழர் தாயகம் எனக் கருதப்படும் வடக்கு-கிழக்குப் பகுதியையே குறிக்கின்றது. தீவிர அரசியல் அர்த்தத்துடன் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பண்டைக் காலத்திலிருந்து ஈழம், இலங்கை ஆகிய இரு சொற்களும் ஒரு பொருட்சொற்களாகவே வழங்கி வந்துள்ளன. அவ்வகையில் முழு இலங்கையையும் குறிக்கும் சொல்லாகவே நான் ஈழம் என்பதை இங்கே பயன்படுத்துகிறேன். தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மொத்தச் சனத்தொகையில் அரைவாசிக்கு அதிகமானோர் வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழ்கிறார்கள் என்பதையும் நாம் மனம் கொள்ள வேண்டும். அத்தோடு ஈழத் தமிழர் என்பது இலங்கையில் வாழும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட அனைவரையும் உள்ளடக்காது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இனி விசயத்துக்கு வருவோம். குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தமிழக இலக்கியத்துக்கும் ஈழத் தமிழ் இலக்கியத்துக்கும் இடையே பெரிய வேறுபாடு இருந்ததாகக் கூற முடியாது. ஆனால் கலாச்சாரம் சார்ந்த சிற்சில வேறுபாடுகளைக் காண முடியும். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காலனியத்திற்கெதிராக இலங்கையில் அடையாள அரசியல் ஒன்று உருவாயிற்று.

பிரித்தானிய அரசின் ஆதரவு பெற்ற கிறிஸ்தவத்திற்கு எதிராக ஆறுமுக நாவலர் இந்து அல்லது சைவ அடையாளம் பற்றியும் சித்தி லெப்பை இஸ்லாமிய அடையாளம் பற்றியும் அநகாரிக தர்மபால போன்றோர் பௌத்த அடையாளம் பற்றியும் பேசத் தொடங்கினார்கள். இவற்றைச் சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் என்று நாங்கள் சொல்கிறோம். இந்தக் காலகட்டத்தில் இந்து அல்லது சைவ வேளாள, இஸ்லாமிய, சிங்கள அடையாளங்கள் இலங்கையில் வலுப்பெற்றுவிட்டன.

அரசியல் நலன் சார்ந்து உருவான இந்த அடையாளங்களும் அவற்றின் பிரச்சினைகளும் மெல்ல மெல்ல இலக்கியத்திலும் இடம்பெறத் தொடங்கின. ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகுதான் அது கூர்மை அடைந்தது.

**காலனியக் கிறிஸ்துவத்துக்கு எதிராக உருவான இந்த அடையாளங்களுக்கு இடையில் முரண்பாடு இருந்ததா?**

ஆம். அடையாள அரசியல் ஓர் எதிர்வினைக் கருத்துநிலைதான். ஏதாவது ஒன்றுக்கு எதிராகத்தான் அது கட்டமைக்கப்படுகிறது. தன்னைப் பிறவற்றிடமிருந்து அது வேறுபடுத்துகிறது. பிற அடையாளங்களைவிடத் தன்னை மேன்மையாகக் கருதிக்கொள்கிறது. அவ்வகையில் ஒவ்வொரு அடையாளமும் பிற அடையாளங்களுக்கு எதிரானதுதான்.

பௌத்த சிங்கள அடையாளம் பிற அடையாளங்களை வெளி ஒதுக்குவது. சைவத் தமிழ் அடையாளமும் அப்படியே. சைவத் தமிழ் அடையாளம், பௌத்த அடையாளம் ஆகியவற்றுக்கு எதிர்வினையாகத்தான் இஸ்லாமிய அடையாளம் இலங்கையில் உருவாயிற்று. இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை அப்போதைய பிரித்தானிய அரசு அறிமுகப்படுத்தியபோது இலங்கையில் அந்தஸ்துமிக்க தலைவராக விளங்கிய பொன்னம்பலம் இராமநாதன் என்பவர்தான் தமிழ் பேசும் சிறுபான்மையினரின் பிரதிநிதியாக இருந்தார். அக்காலகட்டத்தில் வளர்ந்து வந்த இஸ்லாமிய நடுத்தர வர்க்கத்தினர் தங்களுக்கெனத் தனியான பிரதிநிதித்துவம் வேண்டுமென்று விரும்பினார்கள். அரசாங்கத்திடம் அக்கோரிக்கையை முன்வைத்தார்கள். ஆனால் அக்கட்டத்தில் இராமநாதன் அதற்கு எதிராகப் பேசினார். இஸ்லாமியர்கள் தனி இனக் குழுவினர் அல்ல. சமயத்தால் வேறுபட்டிருந்தாலும் அவர்கள் தமிழர்கள்தாம் என்று அவர் வாதிட்டார். அது தொடர்பாக ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றையும் வெளியிட்டார். முஸ்லிம்கள் தங்களை அராபியரின் வம்சாவளியினர் எனச் சொல்வதை அவர் மறுத்தார். இக்கருத்தை இஸ்லாமிய உயர்குழாத்தினர் தீவிரமாக எதிர்த்தனர். அவர்கள் தாங்கள் அராபிய வழித்தோன்றல்கள் என்றும் தங்களுடையது தூய அரபு ரத்தம் என்றும் வாதிட்டனர். தங்கள் மூதாதையர் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்ததால் சில கலாசார ஒற்றுமைகள் இருக்கலாம், ஆனால் தங்களுக்கும் தமிழர்களுக்கும் இனரீதியாக எந்த உறவும் இல்லை என்றனர். வர்த்தகத் தேவைகளுக்காகத் தாங்கள் கடன்வாங்கிய மொழிதான் தாங்கள் பேசும் தமிழ் என்றனர். இத்தகைய கருத்துகள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வலுவாகப் பேசப்பட்டன.

இலங்கையில் தமிழ் பேசும் இஸ்லாமியர் மத அடையாளத்தை முதன்மைப்படுத்தித் தாங்கள் தமிழர் அல்ல தனியான இனக் குழுவினர் என்பதை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே உறுதிப்படுத்திக்கொண்டனர். போத்துக்கேயர் காலத்திலிருந்து தம்மீது திணிக்கப்பட்ட விடயங்கள் என்ற அடையாளத்தை ஏற்றுக்கொண்டனர். தமிழில் தங்களைச் சோனகர் என அழைத்தனர். சில அரசியல் காரணங்களுக்காகத் தவிர இலங்கைத் தமிழர்களும் இங்குள்ள முஸ்லிம்களைத் தமிழர் என்று கருதுவதில்லை. பிரித்தானியர் காலத்திலிருந்து அரச ஆவணங்களிலும் முஸ்லிம்கள் தனி இனக் குழுவினராகவே அடையாளப்படுத்தப்படுகின்றனர். சிங்கள பௌத்த அடையாளத்துக்கு எதிர்வினையாகவும் முஸ்லிம் அடையாளம் இலங்கையில் வலுப்பெற்றது. தீவிர சிங்கள பௌத்த தேசியவாதிகள் வர்த்தகப் போட்டி காரணமாக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிராகத் தீவிரப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதன் விளைவாக நவீன இலங்கையின் முதலாவது மிகப் பெரிய இனக் கலவரம் - சிங்கள - முஸ்லிம் கலவரம் - 1915இல் வெடித்தது.

இதில் முஸ்லிம்கள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். பிரித்தானிய அரசு ராணுவச் சட்டத்தைப் பயன்படுத்தி அக்கலவரத்தை அடக்கியது. அது தொடர்பாக அன்றைய தமிழ்த் தலைமை சிங்கள தேசியவாதிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டமையும் இந்த இனத்துவ அடையாள இடைவெளியை ஆழமாக்கவே உதவியது.

காரணம் எதுவாயினும், நவீன இலங்கையில் இலங்கையர் என்னும் அடையாளத்துக்குப் பதிலாகச் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற அடையாளங்களே வலுப்பெற்றன. இலங்கையில் முஸ்லிம்கள் தமிழையே தாய்மொழியாகக் கொண்டிருப்பினும் தங்களைத் தமிழர் என்று அடையாளப்படுத்துவதில்லை என்பது முக்கியமான அம்சம். தமிழ்நாட்டில் நிலைமை அப்படியல்ல.

இங்கு இஸ்லாமியர் ஒருவர் தன்னைத் தமிழர் என்றோ இஸ்லாமியத் தமிழர் என்றோ தமிழ் முஸ்லிம் என்றோ அழைப்பதை ஏற்றுக்கொள்வார். ஆனால் இலங்கையில் அப்படியல்ல.

**அப்படியானால் இலங்கையில் அது வெறும் சமய அடையாளம் மட்டுமல்ல?**

சமய அடையாளம் அல்ல. அது இனத்துவ அடையாளமாகத்தான் இருக்கிறது. மதம் இங்கு இன அடையாளத்தின் குறியீடாக இருக்கிறது. இது முஸ்லிம்களைப் பொறுத்தவரை மட்டும்தான்.

சிங்களம் பேசும் கிறிஸ்தவர் தங்களைச் சிங்கள வர் என்று அடையாளப்படுத்திக் கொள்வதுபோல் தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் தங்களைத் தமிழர்கள் என அடையாளப்படுத்திக்கொள்கின்றனர். ஆனால் தமிழ் பேசும் முஸ்லிம்கள் தங்களைத் தமிழர் என அடையாளப்படுத்துவதில்லை. இந்த அடையாள அரசியலுக்கு ஒரு நூற்றாண்டுக்கு அதிகமான வரலாறு உண்டு. அது இலக்கியத்திலும் பிரதிபலிக்கிறது.

ஆக ஈழத் தமிழர்கள் என்று பேசும்போது அது ஒரு தனி அலகு அல்ல என்பதை நாம் மனம்கொள்ள வேண்டும். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அடையாள அரசியலில் இன்னொரு மாற்றம் வருகிறது. இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காகப் பிரித்தானியர் தமிழ்நாட்டிலிருந்து கூலித் தொழிலாளர்களைக் கொண்டுவருகிறார்கள். அவர்கள் காலப்போக்கில் பத்து லட்சத்திற்கு அதிகமாகப் பெருகி தனி இனக் குழுவாக உருவாகிறார்கள்.

அவர்கள் தொழிற்சங்கங்களால் வர்க்க அடிப்படையில் ஒன்று திரட்டப்பட்டார்கள்.

அவர்களுக்கு வர்க்க அடையாளமும் இனத்துவ அடையாளமும் படிப்படியாக உருவாயின. அவர்கள்தான் மலையகத் தமிழர்கள் என்று இப்போது அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் பெரிய ஒட்டுறவு இல்லை. அவர்களுடைய சமூக, அரசியல், பொருளாதார நலன்கள் இவர்களுடையதி லிருந்து வேறுபட்டவை. மலையகத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்மீது - குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்மீது - கொஞ்சம் எதிர்ப்புணர்வோடுதான் இருந்தார்கள். ஏனென்றால், மலையகத்தில் கிளார்க்குகளா கவோ ஆசிரியர்களாகவோ டாக்டர்களாகவோ நிருவாகப் பதவிகளில் பணியாற்றியவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத் தமிழர்களே.

மலையகத் தமிழர்கள் இவர்களைத் தங்கள்மீது ஆதிக்கம் செலுத்த வந்தவர்களாகவே கருதினார்கள். மலையகத் தமிழர்களின் பிரச்சினை முற்றிலும் வேறானது. இலங்கையில் மிக மோசமான ஒடுக்குமுறைக்கு ஆளான மக்கள் அவர்கள்தான். அவர்கள் மிக மோசமாகச் சுரண்டப்பட்டவர்கள்.

அதனாலேயே தொழிற்சங்கங்கள் அவர்களை ஒன்று திரட்டுவது இலகுவாக இருந்தது. கடந்த நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் இடதுசாரித் தொழிற்சங்கங்கள் அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தன. 1920-30களில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் முக்கியமான, வலிமையான சக்தியாக உருவாகியிருந் தனர்.

இதில் தொழிற்சங்கவாதியான கோ. நடேசையர் போன்றோரின் பங்கு முக்கியமானது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவரான இவர் இலங்கை அரசாங்க சபையில் உறுப்பினராகவும் இருந்தார். அவருடைய மனைவி மீனாட்சியம்மாளும் செயற்பாட்டாளராக மலையகத்தில் பணியாற்றியிருக்கிறார். சுதந்திரத்துக்குப் பின்னர் மலையகத் தமிழர் தமக்கென்று தனித்துவமான அடையாளமுள்ள இனக் குழுவாக உருவாகிவிட்டனர்.

(இலங்கையின் மூத்த திறனாய்வாளரான பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் இந்திய மாதாந்த இலக்கிய சஞ்சிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணல்)

*(நாளை தொடரும்)*

# நெடுந்தீவு மூலிகைகளும் மூலிகை வைத்தியமும் பாதுகாக்கப்படுமா?



இன்றைய விந்தையான சூழலில் உள்ளூருக்குள் இருக்கின்ற பல உற்பத்திகள் பயன்படாமல் இருப்பதை கண்கூடாகக் காணமுடிகின்றது. இவற்றில் ஒன்றுதான் மூலிகைகள். ஆயுள்வேத மருத்துவ மனைகளை நாடுபவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் மட்டுமே உள்ளனர்.

யாழ். குடாநாட்டில் மூலிகைகளுக்குப் பெயர்போன இடம் தீவகம் என்றால் அதனை மறுக்க வாய்ப்பேயில்லை. இதனை இறைவனின் கொடை என நம்புபவர்கள் இன்றும் உள்ளனர். இலங்கைத் தீவுக்குள்ளே 7 தீபகற்பங்கள் காணப்பட்டாலும் நெடுந்தீவில் அதிகமான மூலிகைகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

50 வருடங்களுக்கு முன்னர் நெடுந்தீவு மக்கள் மூலிகையை மாத்திரமே வைத்து வியாதிகளைத் தீர்த்து வந்துள்ளனர். 200 இற்கும் மேற்பட்ட மூலிகைகளைக் கொண்டிருந்த இத்தீவு மண்ணில் தற்போது குறைந்தளவு மூலிகையே காணப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இன்னும் சில மூலிகைகள் அழிவு நிலைக்குட்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவு மண்ணில் கத்தாளை, நொச்சி, வேம்பு, கிலுகிலுப்பை, வேரில்லாக்கொத்தன், வாய்விளங்கு, பிரண்டை, எருக்கு, வாதமடக்கி, பாவட்டை, ஒதி, பாலை, ஆல், ஆமணக்கு, ஈஞ்சு, மஞ்சவண்ணா, கொவ்வை, முருங்கை, தயிர்வளை, உத்தமாகாணி, இலுப்பு, காக்கணவன், முள்முருக்கு, நரி இலந்தை, வட்டத்துத்தி, குறிஞ்சா, தீந்தில், தாளி, பனந்தாளி, பிரம்பட்டநார், நாயுருவி, தூதுவளை, புல்லாந்தி, தேங்காய்ப்பூக்கீரை, கீழ்க்காய் நெல்லி, சாறண, சிற்றவரை, வாதராணி, ஆடாதோடை, சில்லிக்கொடி, ஆவுரி, இயங்கு, குன்றிமணி, வீணாலை, மொசுமொசுக்கை, கற்பூரவள்ளி, மணித்தக்காளி, கண்டங்கத்தரி, பிரதமதண்டு, பேராமட்டி, கருவேல், முசுட்டை, விடத்தல், நஞ்சுறுப்பான், பசளி, தவிட்டை, காஞ்சாங்கோரை, வீழி மாவலிங்கு, காரை, மருதோண்டி, தொய்யில், மிளகுகரணை, செம்முள்ளி, மருது, எலிச்செவியன், நறுவிலி, நாயுருவி போன்ற பல மூலிகைகள் காணப்படுகின்றன.

ஆனால் இவற்றில் பல மூலிகைகள் அழிவடைந்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர். இன்றும் மூலிகையைக்கொண்டு வைத்தியம் செய்து வரும் தர்மலிங்கம் முத்துமலர் எனும் பெண்மணி.

அது மட்டுமல்லாது மூலிகைகள் இறைவனின் உன்னத படைப்பு என நம்பும் மக்கள் கூறும் கதையொன்றும் உள்ளது. இராமாயணத்தில் ஒரு கட்டத்தில் அனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கிக் கொண்டு இலங்கையை அடைந்தார் என வரலாறு கூறுகின்றது. அந்தத் தருணத்தில் அம்மலையின் சிறிய துண்டுகள் பல தவறுதலாகக் கீழே விழுந்துள்ளன. அவ்வாறு விழுந்த பகுதிகளில் கல்லோடு சேர்ந்து விழுந்த ஒரு பகுதிதான் நெடுந்தீவு என நம்பப்படுகிறது.

அனுமன் தூக்கிச் சென்ற மலையானது மூலிகை நிறைந்த மலை. எனவேதான் தீவகத்தில் மூலிகைகள் நிறையக் காணப்படுவதாக மக்கள் நம்புகின்றனர். அத்தோடு முதலில் பெரிய மலைத்துண்டு விழுந்ததால் உருவான நெடுந்தீவு தீவுக்குள்ளே பெரிய தீவாகவும் எல்லா வகையான மூலிகைகளும் கிடைக்கக்கூடிய தீவாகவும் காணப்படுகின்றது எனவும் குறிப்பிடுகின்றனா.

சஞ்சீவி மலையில் இருந்ததாக குறிப்பிடப்படும் முக்கியமான மூலிகையான "சஞ்சீவி" எனும் மூலிகை மரம் இன்றும் நெடுந்தீவில் காணப்படுவதும் பெருமைக்குரிய ஓர் விடயமே. எது எவ்வாறு இருப்பினும் இங்குள்ள மக்கள் முன்னர் மலேரியா, செங்கண்மாரி, விஷக்கடி, முறிவு தெறிவு, சொறி, சிரங்கு, சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் போன்றவற்றிற்கு அங்குள்ள மூலிகையை வைத்தே வைத்தியம் செய்துள்ளனர்.

இன்னொரு சாரார் அழிவடைந்து வருகின்ற மூலிகைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டு நிற்கின்றனர். அங்கே இயங்கி வந்த ஆயுள்வேத மருத்துவமனையை ஒழுங்காக நடத்துமாறும் இத்தீவுக்கென்று நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றனர்.

மக்களின் விருப்பம் நிறைவேறுமா? அழிவை எதிர்கொண்டிருக்கும் மூலிகைக்கு பாதுகாப்பு கிடைக்குமா?

## கிளிநொச்சி சந்தைத் தொகுதி கட்டடம் – முதலாம் கட்டம் நிறைவு



கிளிநொச்சி சந்தைத் தொகுதியின் முதலாம் கட்ட நிர்மாணப்பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் அவற்றினை பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் பார்வையிட்டார்கள். இதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் இரண்டாம் கட்டப் பணிகளை மிக விரைவில் ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

இக்கட்டத் தொகுதியில் மரக்கறிக் கடைத் தொகுதி, மீன் கடைத் தொகுதி என்ன அமைக்கப்பட்டுள்ளன. தற்சமயம் சந்தைத் தொகுதிக்கான ,நீர் வழங்கல் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் திரு.இ.இளங்கோவன், பிரதி பிரதம செயலாளர் (நிதி)ஏ.மனோரஞ்சன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஸ்ரீநிவாசன், கிளிநொச்சி மாவட்டத்திற்காண பிராந்திய ஆணையாளர் எஸ்பத்மநாதன் மற்றும் கிளிநொச்சி வர்த்தக சங்க பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.

## ஊர்திரு

கோணப்புலம் தெல்லிப்பளை பிரதேச சபைக்கு உட்பட்ட ஒரு சிறிய கிராமம். இக்கிராமத்தின் தற்போதைய குடிகள் கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன்பு தமது வாழ்விடங்களான காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டி, பலாலி ஆகிய இடங்களை விட்டு ஒரே நாளில் இடம்பெயர்ந்து சென்றவர்கள்.

தமது மண்ணை மரணிக்கும் முன் ஒரு தடைவை பார்த்து விடவும் அந்த நிலத்தில் தேகம் சாய்த்து துயின்றிடவும் துடிக்கின்ற மக்கள் கூட்டத்தின் அகதி முகாம் வாழ்க்கை தொடர்கிறது. விரட்டப்பட்ட நாளிலிருந்து நாளை நாளை என தாம் மீண்டும் குடியேறப்போகும் தினத்தை எண்ணி எண்ணியே இரண்டு தசாப்தங்களை ஏமாற்றத்துடனும் கனவுகளுடனும் கழித்து விட்டார்கள்.

கடும் உழைப்பையே தமது மூலதனமாகக் கொண்டு தம்மையும் மற்றவரையும் வளப்படுத்தும் ஓர்மம் கொண்ட இந்த மக்கள் மீன் பிடியையும், விவசாயத்தையும் பிரதான வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். இன்று தமது கடலையும் செம்மண்ணையும் கண்ணில் பார்க்க முடியாமல் அவர்கள் படும் வேதனைகள் சொல்லில் அடங்காதவை. சொந்தத் தொழில்களாக அவர்களுக்கு இருந்த மீன் பிடியும், விவசாயமும் இன்று அவர்களுக் குக் கூலித் தொழிலாகிப் போனது. கடும் உழைப்பின் பலனாக மாளிகைகளாக இருந்த அவர்களது இல்லங்கள் இன்று பாழடைந்து, காணிகளெல்லாம் பற்றைக்காடுகளாக பரிணாமம் பெற கோழிக்கூட்டுக்குள்ளே தமது எஞ்சிய வாழ்வைக் கடத்தும் அவலத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

சாதாரண நாட்களில் எமது அரசியல் தலைமைகளுக்கு மனிதர்களாகத் தென்படாத கோணப்புலம் அகதி மக்களைப் போன்றவர்கள் தேர்தல் "சீசனில்" மட்டும் வரம் தரும் கிராமத் தெய்வங்களாக மாறும் அதிசயம் நடக்கிறது.

தேர்தல் சீசன் முடிந்தது. எவரும் அம் மக்களை இப்போது பார்க்க வரவில்லை. நீண்ட நாட்களாகியும் தாம் மீளக்குடியமர்த்தப்படாமல்

# சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா பயிற்சிநெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




தேசிய நிறுவனமும் இணைந்து சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா பயிற்சிநெறியினை வெற்றிகரமாக நடாத்தியது. இதில் 39 அரச உத்தியோகத்தர்கள் கலந்து பயிற்சியினை பூர்த்தி செய்தார்கள்.

இப்பயிற்சி நெறியானது சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சிறந்த திறனை அரச உத்தியோகத்தர்கள் பெற்று அதன் மூலம் எமது சிறுவர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கக்கூடிய விதத்தில் விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. இவ் 15 மாதகால டிப்ளோமா பயிற்சிநெறி கோப்பாயிலுள்ள சுகாதார வைத்திய பணிமனையில் உள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவன பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா பயிற்சிநெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன் தினம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கியிருந்தார். சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.ஏ.அலாமும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணானந்தன், சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் ரி.விஷ்வரூபன், சமூக சேவைகள் கல்லூரியின் பயிற்சி இணைப்பாளரும் விரிவுரையாளருமான திருமதி வரதகௌரி வாசுதேவன், விரிவுரையாளர்கள் வி.ஜெயரூபன், எஸ்.கரிகரதாமோதரன் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

# நீர் கொழும்பு பெரிய முல்லையில் அனைத்து இன மக்களின் ஒன்று கூடல்

நீர்கொழும்பில் சகல இனமக்களும் நெருக்கமாகவும் ஐக்கியமாகவும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து வருகின்றனர். இந்த ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் மேலும் வளர்த்துக் கொள்ளும் நோக்கில் நீர்கொழும்பு பெரிய பள்ளிவாசல் இம்முறை நோன்புப் பெருநாள் விருந்துபசார வைபவம் ஒன்றை பள்ளிவாசலில் ஏற்பாடு செய்தது.

இவ் வைபவத்திற்கு சகல இன மக்களும்,அழைக்கப்பட்டிருந்தனர். மேலும் நீர்கொழும்பு பெரிய முல்லை கிராமத்தில் முஸ்லிம் சகோதரர்களுடன் ஒன்றாக வாழும், தமிழ், சிங்கள சகோதரர்களும் இவ் விருந்துபசாரத்திற்கு அழைக்கப்பட்டிருந்தமை இவ் வைபவத்தை மெருகூட்டியதாக அமைந்தது. நீண்ட காலமாக நீர்கொழும்பு மக்கள் இனரீதியான பிரச்சினைகள் எதுவுமின்றி ஒற்றுமையாக வாழ்ந்துவருகின்றனர்.

இந்த ஒற்றுமை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். சகல இனமக்களும் கையின் ஐந்து விரல்களை போன்று இருக்க வேண்டும். ஐந்து விரல்களையும் சேர்த்து ஒரு கையினால் வேலை செய்யும் போது அது பலமானதாக அமைகின்றது. அவ்வாறு இல்லாது தனி விரலாக பௌத்த, கத்தோலிக்க இந்து முஸ்லிம், பறங்கியர் என பிரிந்து ஒரு கருமத்தை செய்யும் போது அது பலம் குன்றியதாகவே காணப்படும் என்பதே யதார்த்தம்.

## வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனமும் சமூக அபிவிருத்திக்கான வட மாகாண அலுவலகங்களின் புதிய முகவரிகள்

| அலுவலகத்தின் பெயர் | முகவரி |
|---|---|
| 01. கௌரவ ஆளுநரின் செயகலம் | இல.186, கண்டி வீதி, யாழ்ப்பாணம் |
| 02. பிரதம செயலாளரின் செயலகம் | இல.187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் |
| 03. ஆளுநரின் செயலகம் | இல. 34, வனவள அலுவலக வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் |
| 04. உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு | இல. 82, செட்டி வீதி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| 05. விவசாய அமைச்சு | இல. 04, புரூடி லேன், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| 06. கல்வி அமைச்சு | மருதனார்மடம், உரும்பிராய் வீதி, சுன்னாகம் |
| 07. சுகாதார அமைச்சு | இல. 55, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். |
| 08. உள்ளூராட்சி அமைச்சு | முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம். |
| 09. மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு | 10ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால், புத்தூர், யாழ்ப்பாணம். |
| 10. மாகாண திட்டமிடல் செயலகம் | நூலக வீதி (டச்சு வீதி), கல்வியங்காடு, யாழ்ப்பாணம். |
| 11. மாகாணத் திறைசேரி செயலகம் | 79௱2, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். |
| 12. மாகாணப் பொது நிர்வாகச் செயலகம் | இல 695, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| 13. கணக்காய்வுத் திணைக்களம் | இல. 115, செம்மணி வீதி, யாழ்ப்பாணம். |
| 14. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | இல. 35, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| 15. வீதி அபிவிருத்தித் திணைக்களம் | இல. 653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| 16. கட்டிடங்கள் திணைக்களம் | இல. 40, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். |
| 17. முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் | இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், யாழ்ப்பாணம். |
| 18. சுகாதாரத் திணைக்களம் | இல. 55, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். |
| 19. சுதேச மருத்துவத் திணைக்களம் | இல. 103௱1, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம் |
| 20. உள்ளூராட்சித் திணைக்களம் | முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம். |
| 21. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் | முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம். |
| 22. சமூக சேவைகள் திணைக்களம் | முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம். |
| 23. கைத்தொழில் திணைக்களம் | முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம். |
| 24. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம். |
| 25. கிராம அபிவிருத்தித் திணைக்களம் | முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம். |
| 26. காணி நிருவாகத் திணைக்களம் | இல. 295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| 27. கல்வித் திணைக்களம் | மருதனார்மடம், உரும்பிராய் வீதி, சுன்னாகம் |
| 28. விளையாட்டுத் திணைக்களம் | மருதனார்மடம், உரும்பிராய் வீதி, சுன்னாகம் |
| 29. பண்பாட்டுத் திணைக்களம் | மருதனார்மடம், உரும்பிராய் வீதி, சுன்னாகம் |
| 30. நீர்ப்பாசனத் திணைக்களம் | கச்சேரி ஒழுங்க, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 31. சட்டப் பிரிவு, பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம். | 87, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் |

# ...நம்பும் கனவு...

ஏமாற்றப்பட்டதையிட்டு கட்சி பிரதிநிதிகளிடம் கேட்டபோது "எங்களுக்கு வாக்களித்தீர்களா?" என கேட்கின்றனராம். மக்களுடனான உடன் பாட்டையே பேண மறுப்பவர்களின் விமோசன அரசியலில் இவ் வகையானோர் ஒரு புறம். அண்மையில் இம் மக்களின் சிறார்களது கல்வி நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்குடன் நடவடிக்கையில் இறங்கிய ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவ னத்தை அரண்ட விழிகளால் பார்த்த இளம் அரசியல்வாதி கூறிய வார்த்தைகள்.... "நம்பா தேங்கோ...! கவனமா இருங்கோ இவங்கள் பிள்ளையளின்ர கிட்னியையும் லிவரையும் களவா எடுத்து வித்துப் போடுவாங்கள்"

கடற்றொழில் சொந்தமாக செய்தவர்கள் இன்று முல்லைத்தீவு, மன்னார் போன்ற பகுதிகளுக்குச் சென்று அதே கடற்றொழிலை கூலிக்குச் செய்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றனர். இன்னொரு தரப்பினரோ கட்டட வேலைகள் வீதிவேலைகள் என்பனவற்றில் கூலிகளாக வேலை செய்கின்றனர்.

பொருளாதார ரீதியாக மிகவும் தள்ளாடும் இந்த மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி செல்வதற்கே போராடும் நிலை.இதனால் பாடசாலை செல்லும் சிறார்கள் கூட பாடசாலைக்கல்வியை இடைநிறுத்தி விட்டு பழைய இரும்புகளைச் சேகரித்து விற்கும் தொழிலை மேற்கொள்கின்றனர்.

தமது சுற்றாடலில் உள்ள, போரினால் பாதிக்கப்பட்டு சிதைவடைந்து பற்றைகள் மண்டிப் போயிருக்கும் கட்டடங்களைத் தோண்டி இந்த இரும்பு வகை பொருட்களை அவர்கள் சேகரிக்கின்றார்கள். இதனால் கல்வியை இழந்து எதிர்காலத்தையே பழாக்கிக் கொள்வதுடன் இரும்பு சேகரிக்கும் முயற்சியில் பாரதூரமான காயங்களுக்குள்ளாகியும் பற்றைகளிடையே மறைந்திருக்கும் விச உயிரிகளின் தாக்குதலுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

இந்த நிலை நிச்சயமாக ஆரேக்கியமான சமூகத்தை கட்டமைப்பதில் பாதிப்புக்களை



ஏற்படுத்தவே செய்யும். அவர்கள் வாழ்விடங்கள் கூட மனிதர் வாழ்வதற்கு ஏற்றதாக இல்லை. மிகக் குறுகிய தற்காலிக கட்டட அமைவுக்குள்ளே வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகள் சமூகச் சீர்கேடுகள் மலிந்து இளவயதுத் திருமணம், பதின்ம வயதுக் கர்ப்பம், முறை தவறிய நடத்தைகள் என்பனவற்றின் தோற்று வாய்களை உருவாக்குகின்றன.

அத்துடன் இந்த இடங்களில் இருப்பதற்கும் தற்போது அவர்கள் கடந்த நெருக்கடி காலங்களில் இந்த இடங்களில் குடியமர அனுமதித்த நிலச் சொந்தக்காரர்கள் தற்போது இவர்கள் அனைவரையும் வெளியேறும்படி நிர்ப்பந்திக்க தொடங்கியிருக்கின்றனர். இதுவரை இருந்து வந்த பிரச்சினைகளுடன் இப்புதிய பிரச்சினையும் சேரவே திக்கு முக்காடிப் போய் விழி பிதுங்கி நிற்கும் இந்த ஆதரவற்றோருக்கு கரங்கொடுக்க எந்த அரசியல் அமைப்புக்களோ, அரச நிறுவனங்களோ, பொது அமைப்புக்களோ முன் வரவில்லை. எனினும் இவற்றை இப்படியே விட்டு விடாது இந்த மக்களுக்கு ஏதாவது விமோசனம் பெற்றுக் கொடுக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பு மிக்கோரின் கடமையாகும். காகக்கூட்டிலே குடியிருக்கும் இந்த குயில்களுக்கு விடிவு கிடைக்குமோ?

சரணிகா

# துர்க்கா மணிமண்டபத்தில் நேற்று பாரதி விழா

யாழ்ப்பாண தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் பாரதி விழா நேற்று நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறுகின்றது.

காலை அமர்வு வண.கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் தலைமையில் காலை 9 மணியளவில் ஆரம்பமானது.

காலை நிகழ்வில் எங்கள் பார்வையில் பாரதி என்னும் தலைப்பில் மாணவர் அரங்கமும் மகாகவி பாரதி என்னும் இறுவெட்டு வெளியிடும் நடைபெற்றது.

அத்துடன் பாரதியின் பன்முக ஆளுமையும் புனைதிறனும் என்னும் சிறப்பு சொற்பொழிவை தென்கிழக்கு பல்கலைக்கழக மொழி பண்பாட்டுத்துறை தலைவர் கலாநிதி றமீஸ் அப்துல்லா வழங்கினார். மாலை அமர்வுகள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் மாலை 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

மாலை நிகழ்வில் கனவு மெய்ப்பட வேண்டும் என்னும் தொனிப் பொருளில் கவியரங்கமும் பாரதி கண்ட தெய்வீகம் என்னும் தொனிப்பொருளில் ஆறுதிருமுருகனின் சிறப்பு சொற்பொழிவும் பாரதியின் புலமைத்துவம் என்னும் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

1882ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி பிறந்த பாரதியாரின் இயற் பெயர் சுப்பிரமணியன் என்பதாகும்.

கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கை யாசிரியர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி என பல்வேறு பரிமாணங்கள் கொண்டவர் சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு மற்றும் பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி இந்தியாவின் தேசிய கவியாக போற்றப்படுகிறார் பாரதியார்.



முன்னேஸ்வரம் காளி கோயில் விவகாரம்:

# மிருக பலி பூஜையை நிறுத்தும் அதிகாரம் நீதிமன்றுக்கு இல்லை

## சிலாபம் மாவட்ட நீதிமன்றம் அறிவிப்பு

சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோயிலில் வருடாந்தம் இடம்பெறும் மிருகபலி பூஜையை நிறுத்தக்கோரி, பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனு, சிலாபம் மாவட்ட நீதிமன்றினால் நேற்று செவ்வாய்க்கிழமை நிராகரிக்கப்பட்டது.

அத்துடன், மேற்படி மிருகபலி பூஜையை நிறுத்தும் அதிகாரம் தனக்கு இல்லை என சிலாபம் மாவட்ட நீதவான் ஜகத் ஏ கஹந்தகமகே தெரிவித்துள்ளார்.

"துன்ஹலே ஜாதக வியாபாரய" எனும் அமைப்பின் பொதுச் செயலாளர் ஓமாரே கஸ்ஸப தேரரால், காளி கோயில் மிருகபலி பூஜையை நிறுத்துமாறு சிலாபம் பொலிஸில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதவான் அதனை நிராகரித்தார்.

# களுத்துறை பிரதேச சபை தலைவருக்கு பிணை அனுமதி

இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சுமார் ஒரு மாத காலத்திற்கு மேல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த களுத்துறை பிரதேச சபை தவிசாளர் விதான பிரியங்க லிமன் நேற்று செவ்வாய்க்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் களுத்துறை பிரதேச சபை தவிசாளர் விதான பிரியங்க லஷ்மன மற்றும் அவரின் சாரதி இந்திக்க பிரிய சாந்த சட்டன் ஆராச்சி ஆகியோர் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது 200,000 ரூபா காசுப் பிணையிலும் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான சரீர பிணையிலும் கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

குறித்த நான்கு சரீர பிணைகளில் மூவர் அரச அதிகாரிகளாகவும் மற்றையவர் நெருங்கிய உறவினராகவும் இருக்க வேண்டும் என நீதவான் உத்தரவிட்டார்.

காணி ஒன்றுக்கு வீதி அனுமதி வழங்குவதற்காக 3 மில்லியன் ரூபா இலஞ்சமாக பெற முயன்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரிகளினால் இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி தேவிபுரத்தில் வாழ்வாதார உதவித்திட்டம்

(மருதனார்மடம்)

கிளிநொச்சி தேவிபுரத்தில் வாழும் பெண்களுக்கான வாழ்வா தார உதவித் திட்டமாக இலவச தையல் பயிற்சி அவுஸ்ரேலியாவில் வாழும் இலங்கையைச் சேர்ந்த கிழக்கி லங்கைப் பாடகருமான நித்தி கனகரட்ணத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது.

ஆறுமாதம் நடைபெற்ற இப்ப யிற்சியின் நிறைவு அண்மையில் நடைபெற்றது. இதில் பேராசிரியர் நித்திய கனகரட்ணம், பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இத்திட்டத்தில் 30 பேர் பயன் பெற்றனர். பேராசிரியர் இளமைக் காலத்தில் முற்றது மல்லிகை நிகழ்ச்சி மூலம் பிரபல்யமான சின்னமாமியே உன் சின்ன மகளெங்கே... என்னும் பாடல் மூலமாக பிரபல்யமான இலங்கை யின் பொப்பிசைப் பாடல் சக்கரவர்த்தி என்று புகழப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் வாழ்வாதார உதவி மூலம் போரினால் பாதிக்கப்படடு மீளக்குடியேறிய கிளிநொச்சி தேவிபுரம் பிரதேச மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் என்பன மேம்படும் என எதிர்பார்கப்படுகிறது.

# யாழ். பல்கலைக்கழக வெளிவாரி அலகில் 250 பேர் பட்டம் பெறுவர்

(மருதனார்மடம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பரீட்சை அலகினால் நடத்தப்பட்ட கலைமாணிப் பட்டம்-2008, வணிகமாணிப் பட்டம்-2009 இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து பட்டம் பெறுவோர் பெயர்ப்பட்டியில் வெளியாகியுள்ளது.

இவ்வாண்டு 224 மாணவர்கள் கலைமாணிப் பட்டம் பெறுகின்றனர். இவர்களில் 12 பேர் இரணடாம் தர கீழ் பிரிவில் சித்தி பெற்றுள்ளனர். 212 பேர் சாதாரண பிரிவில் சித்தியடைந்துள்ளனர். மேலும் 26 பேர் வணிக மாணிப் பட்டம் பெறுகிறார்கள். இவர்களில் 23 மாணவர்கள் சாதாரண பிரிவிலும், 13 மாணவர்கள் இரண்டாந்தர கீழ் பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர் என யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் அலகின் இணைப்பாளர் சி.சி.வரதராஜா தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் நேரடியாகத் தொடர்புகொண்டு பரீட்சை பெறுபேற்று விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

# பிடி ஆணையை இரத்து செய்ய கோரி அமைச்சர் டக்ளஸ் மனு

## சென்னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அதன் மீதான பிடி ஆணை உத்தரவை இரத்து செய்யக கோரி அமைச்சர் டக்லஸ் தேவானந்தா சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

1986ஆம் ஆண்டு சென்னை சூளைமேட்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் திருநாவுக்கரசு என்பவர் கொல்லப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் மீது கொலைக் குற்றம், சட்டவிரோதமாக ஆயுதங்களை பயன்படுத் துவ்து உள்ளிட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த டக்ளஸ் தேவானந்தா பின்னர் பிணையில் வெளியே வந்தார்.

1990ம் ஆண்டு வரை வழக்கு விசாரணையின் போது நேரில் ஆஜராகி வந்த இவர் பின் னர் இலங்கைக்கு வந்துவிட்டார். அதன் பிறகு மேற்படி கொலை தொடர்பில் நடைபெற்ற விசாரணைகளில் ஆஜராகாததைத் தொடர்ந்து அவருக்கு எதிரான பிடி ஆணை உத்தரவை சென்னை செஷன்ஸ் நீதிமன்றம் பிறப்பித் திருந்தது.

இந்த நிலையில், தன் மீதான பிடியாணை உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி சென்னை நான்வது மேலதிக செஷன்ஸ் நீதிமன்றத்தில் அவர் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், தனக்கு எதிராக இந்திய நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தனக்கு தெரி யாது என்றும், அரசு முறைப்பயணமாக இந்தியா வந்தபோதுதான் அது பற்றி தெரியவந்ததாகவும், தற்போதைய சூழ்நிலையில் நீதிமன் றத்தில் ஆஜரானால் தனக்கு, எதிராக வன்முறை சம்பவம் நடக்க வாய்ப்பிருப்பதாகவும், அவர் கூறியுள்ளார்.

இந்த சூழ்நியை கருத்தில் கொண்டு தான் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளித்தும்,பிடிஆணை உத்தரவை இரத்து செய்தும் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.



ஆனந்தி ரஞ்சன் தம்பதிகளின் நிதி அனுசரணையுடன் அமைக்கப்பட்ட தர்மக்கேணி ரஞ்சன் முன்பள்ளி திறப்பு விழாவின் போது உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினரால் திறந்து வைக்கப்பட்டது.

(மருதனார்மடம்)

16)மேடைப் பிரிப்பில் பலம் கூடிய பகுதி

1.C.R. 2.C.U. 3.C.C 4.U.R

17)பரதர் கூறும் ரஸங்களின் எண்ணிக்கை

1. 7 2. 9 3. 10 4. 8

18)ஒளியூட்டலின் தந்தை

1.கோல்டன்கிறெக் 2.அடல் அப்பியா 3.நா.சுந்தரலிங்கம் 4.அயனெஸ்கோ

19)மாணவர்களது திறன்களை வெளிக்கொணரும் முகமாக தேசிய ரீதியான போட்டிகளை நடத்தும் கல்லூரி

1.மானிப்பாய் இந்துக் கல்லூரி 2.கொக்குவில் இந்துக் கல்லூரி 3.யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 4.கொழும்பு றோயல் கல்லூரி

20)அரிஸ்ரோட்டலின் கருத்துப்படி நாடக தோற்றம் என்பது

1.இயல்பூக்கம் 2.சடங்கிலிருந்து 3.போலச்செய்தல் 4.ஆவிவழிபாடு

21)அபசுரம் நாடகம்

1.அபத்தம் 2.இசைநாடகம் 3.குறியீட்டு நாடகம் 4.வரலாற்று நாடகம்

22)வானொலி நாடகத்தின் பிரதான அம்சம்

1.ஆடலுக்கு முதன்மை கொடுப்பது 2.இசை வெளிப்பாடு 3.செவிவழியாக வருவது 4.பாடலுக்கு முதன்மைகொடுப்பது

23)பாத்திரம் ஏற்கும் நடிகரின் பிரதான பணி

1.ஆடல் 2.பாடல் 3.ஆள் மேற்கொள்ளல் 4.வசனம் பேசல்

24)நாடகம் எழுதுபவர்

1.நாடக ஆசிரியர் 2.கதாசிரியர் 3.கவிஞர் 4.இசை ஆசிரியர்

25) மண்சுமந்த மேனியர் நாடகத்தின் நெறியாளர்

1.க. ரதிதரன் 2.க. சிதம்பரநாதன் 3.நா.சுந்தரலிங்கம் 4.அ.தாஸிஸியஸ்

26) நாடக அரங்க கல்லூரி உருவாக்கப்பட்ட ஆண்டு

1.1974 2.1975 3.1976 4.1778

27)காத்தவராயன் கூத்தின் பிரதான பாத்திரம்

1.காத்தான் 2.சிவன் 3.விஸ்ணு 4.அம்மன்

28)நாடகத்தினை விமர்சிப்பவர்

1.பார்வையாளர் 2.ரசிகன் 3.விமர்சகர் 4.விறியோகித்தர்

29)உலக நாடக தினம் கொண்டாடப்படுவது

1.மாசி 27 2.பங்குனி 27 3.சித்திரை 27 4.ஆடி 27

30)காமன் கூத்தில் வரும் பெண் பாத்திரம்

1.மாரி 2.ரதி 3.நல்ல தங்காள் 4.ஞான சௌந்தரி

***(மிகுதி அடுத்தவாரம்)***

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 12.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

கல்வி ஒளி

12-09-2012

தமிழ்நாதம்
Thamil Naatham

மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 13

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) ப்பரீட்சை - டிசெம்பர் 2012

ஆசிரியர்: என்.ரி.தரன் சைவநெறி (மாதிரி வினாத்தாள்) நேரம்: 3.00

## பகுதி I (தொடர்ச்சி)

31.“பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்...” என்பது எப்பதிகம்?

1.திருவிசைப்பா 2.மணிவாசகர் 3.சிவபுராணம் 4.திருவெம்பாவை

32.ஆகமத்தின் உட்பிரிவு என்று போற்றும் பகுதிகள்

1.நாற்கரணங்கள் 2.சைவநாற்பாதம் 3.நால்வகைமுத்தி 4.புருடார்த்தம்

33.குல தெய்வங்களாக மிளிருவது

1.வைரவர் 2.காளி 3.பெரியதம்பிரான் 4.ஐயனார்

34.நாட்டார் வழிபாட்டில் பெரிதும் பேணப்படுவது

1.கிரியைமுறை 2.சடங்குமுறை 3.தோத்திரமுறை 4.யாகமுறை

**பின்வரும் அட்டவணையை ஆதாரமாகக் கொண்டு 35முதல் 38 வரையிலான வினாக்களிற்கு விடை தருக.**

| I | II | III |
|---|---|---|
| A - மெய்கண்டார் | E - ஆதிசைவம் | I - அன்பர் பணிசெய் |
| B - அருணகிரியார் | F - பராபரக்கண்ணி | J - திருவண்ணாமலை |
| C - தாயுமானவர் | G - சிவஞானபோதம் | K - பன்னிரு சூத்திரம் |
| D - சகலாகம பண்டிதர் | H - திருப்புகழ் | L - இருபா இருப∴து |

35.சித்தாந்த சாஸ்திரமுதன் நூலுடன் தொடர்புடையது

1.AGK 2.AEF 3.BHI 4.DFJ

36.முருகபத்தர்களின் தொடர்பைச் சித்தரிப்பது

1.HJL 2.ABL 3.BHJ 4.BHL

37.சித்தாந்த சாஸ்திர வழிநூலுடன் தொடர்புடையவர் தொடர்

1.BGK 2.CGJ 3.AHI 4.DEL

38.அடியார்களைப் போற்றித் துதிக்கும் நிலையில் தொடர்புடையது

1.CFI 2.DGH 3.BFJ 4.DEI

39.ஆன்மாவின் விடுதலைக்குரிய வழிகள்?

1.பதி 2.பாசம் 3.சைவநாற்பாதம் 4.மும்மலம்

40.“சேர்க்கை” என்று பொருள் கொள்ளுதற்குரிய நெறி

1.சரியை 2.கிரியை 3.யோகம் 4.ஞானம் 40x1=40)

## பகுதி - II

**இரு வினாக்களுக்கும் விடை தருக.**

**01.இருபாடலை அடி பிழையாது பண், தலம், பாடியவர், பொழிப்புரை என்பவற்றைத் தருக.**

1."சிறையாரு மடக்கிளியே..." 2."மாறிநின் றென்னை...."

3."ஆலந் தானுகந் தமுது..." 4."திருவே யென் செல்வமே..."

**(16 புள்ளிகள்)**

**02.சுருக்கமான விடை தருக**

1.ஈழத்தில் பிரசித்தி பெற்ற விநாயகர் தலங்கள் நான்கு தருக?
2.சன்மதங்கள் எவை என்பதைக் குறிப்பிடுக?
3.சிவாகமம் எத்தனை என்பதைக் குறிப்பிடுக?
4.வைஷ்ணவ சமயத்தின் ஆகமங்கள் எத்தனை? பெயரைக் குறிப்பிடுக.
5.மண்டூர் ஆலய விருட்சம், தீர்த்தத்தின் பெயரைக் குறிப்பிடுக.
6.நக்கீரர் பாடிய பாடல்கள் எத்தனையாம் திருமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது?
7.சைவத்திலும் வைஸ்ணவத்திலும் பல்லாண்டு பாடியவர்களைக் குறிப்பிடுக.
8.பெரிய புராணத்தின் முதல்நூல், வழிநூல் யாது?
9.மருணீக்கியார் செய்த அற்புதங்களைக் குறிப்பிடுக.
10.சுவேதனப் பெருமாள் என அழைக்கப்படுபவர் யார்?

**(20 புள்ளிகள்)**

## பகுதி -III

**விரும்பிய மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

01) "ஞானமதில் ஞானநிட்டை உடையோர்க்கு...."

1.சித்தர்கள் என்பதன் பொருளைக் குறிப்பிடுக.
2.தமிழ்நாட்டு ஈழத்துச் சித்தர்களைக் குறிப்பிடுக.
3.யோகர் சுவாமியின் பணிகளைக் குறிப்பிடுக.
4.சித்தருக்கும் பத்தருக்குமான வேறுபாடு யாது?

**(8 புள்ளிகள்)**

**02."முடிந்த முடிவாம் சைவசித்தாந்தம்"**

1.முப்பொருட்களைக் குறிப்பிடுக.
2.பதியின் இயல்புகளைக் குறிப்பிடுக.
3.பாசம் என்பதன் பொருள் யாது?
4.ஆணவத்துக்கு வழங்கும் மறுபெயர்களைத் தருக.

**(8 புள்ளிகள்)**

**03."ஈழத்தின் தொன்மையான மதம் இந்துமதம்"**

1.இயக்கர் நாகர் வாழ்ந்தமைக்கான சான்று யாது?
2.பொலநறுவைக் காலத்தைக் குறிப்பிட்டு வளர்ச்சி கண்ட ஆலயங்களைக் குறிப்பிடுக.
3.ஆங்கிலேயர் காலத்தில் இந்துமதத்தின் தன்மையை விளக்குக.
4.நாவலரின் பணியினைக் குறிப்பிடுக.

**(8 புள்ளிகள்)**

**04."உலகத்தின் முழுமுதற் தெய்வம் சிவனே ஆவார்"**

1.ஈழத்தில் காணப்படும் ஈச்சரங்களைக் குறிப்பிடுக.
2.சுயம்புலிங்க ஆலயம் இரண்டு தருக?
3.கொக்கட்டிச்சோலை ஆலயம் அல்லது ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.
4.கோணேச்சரத்தில் போர்த்துக்கீசர் எத்தினத்தில் படைஎடுத்தனர்? அவர்கள் அழித்த முக்கிய ஆதாரங்கள் எவை?

**05.விரும்பிய இரண்டுக்கு சிறு குறிப்பு தருக.**

1.சேர் பொன் இராமநாதன்
2.சுந்தரர்
3.வல்லிபுரம்
4.சைவ வித்தியா விருத்திச் சங்கம்

**(8 புள்ளிகள்)**



கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை - டிசெம்பர் 2012
நாடகமும் அரங்கியலும் (மாதிரி வினாத்தாள்) நேரம்: 3 மணி

## பகுதி - I

**பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

01)சங்காரம் நாடகத்தின் ஆசிரியர்
1.பேரா.சி. மௌனகுரு 2.வேலு சரவணன் 3.நா. சுந்தரலிங்கம் 4.அ. தாஸிஸியஸ்

02)ஈழத்து நவீன நாடகத்தின் தந்தை
1. கலையரசு சொர்ணலிங்கம் 2.குழந்தை ம. சண்முகலிங்கம்
3. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை 4.பேரா.சி.மௌனகுரு

03)காமன் கூத்தினை பழக்குபவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
1.மாஸ்ரர் 2.காமன் மாஸ்ரர் 3.அண்ணாவியர் 4.நெறியாளர்

04)வாய்மொழியை பயன்படுத்தாது நடிபாகத்தை சித்தரிப்பது
1.ஊமம் 2.நடனம் 3.பாட்டு 4.ஆடல்

05)கேரள பிரதேசத்திற்குரிய வடிவம்
1.கதகளி 2.யக்ஷகாணம் 3.பாகவதமேளா 4.கதக்

06)தெருக்கூத்து எப்பிரதேசத்திற்குரியது?
1.மட்டக்களப்பு 2.யாழ்ப்பாணம் 3.தமிழ்நாடு 4.கண்டி

07)சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது எனக் குறிப்பிட்டவர்
1.அரிஸ் ரோட்டில் 2.J.J.தொம்சன் 3.பிளேட்டோ 4.சோக்கிரட்டிஸ்

08)நாடகம் வாழ்வின் துண்டம் எனக் குறிப்பிட்டவர்.
1.அரிஸ் ரோட்டில் 2.கீட்ஸ் 3.தொம்சன் 4.பெர்னாட்ஷோ

09)அவைக்காற்றுகை கலைக் கழகத்தின் நிறுவுனர்
1.நா. சுந்தரலிங்கம் 2.அ. தாஸிஸியஸ் 3.க.பாலேந்திரா 4.இ.சிவானந்தன்

10)வெறியாட்டு எனும் நாடகத்தின் ஆசிரியர்
1.இ. சிவானந்தன் 2.இ.முருகையன் 3.சொக்கன் 4.மகாகவி

11)ஈழத்து "பா" நாடகங்களின் முன்னோடி
1.து.உருத்திரமூர்த்தி 2.க. கணபதிப்பிள்ளை 3.அ.தாஸிஸியஸ் 4.இ.சிவானந்தன்

12)நாடகத்தை வியாக்கியானிப்பவர்
1.தயாரிப்பாளர் 2.நெறியாளர் 3.நாடகாசிரியர் 4.விமர்சகர்

13)நாடகத்தின் நிதிவழங்குபவர்
1.விமர்சகர் 2.பார்வையாளர் 3.தயாரிப்பாளர் 4.நெறியாளர்

14)பின்வருவனவற்றில் சிறுவர் நாடகம் அல்லாதது
1.பஞ்சவர்ண நரியார் 2.முயலார் முயல்கிறார் 3.உம்மாண்டி விளையாட்டு 4.மண்சுமந்த மேனியர்

15)சிங்கள சிறுவர் நாடகங்களின் முன்னோடி
1.பராக்கிரமநெறியல்ல 2.சோமலதா சுபசிங்க 3.எதிர்வீர சரத்சந்திரா 4.பிரசன்ன விதானகே

Abdul replied, "when someone hurts us we should write it down in the sand where winds of forgiveness can erase it away but when someone does something good for us we must engrave it on stone where no wind can ever erase it."

"You should also learn to write your feelings of hurt in the sand, and to carue your benefits on stone." Father ended the story and stroked Sumudu's head.

1) **underline the correct answer.**

i) When Sumudu came home from school she was

a) sleepy b) hungry c)unhappy d)angry

ii) Samanthi

a) said hurtful things to Sumudy b) slapped sumudu in the face

c) did not speak with Sumudu d) helped her with her work

2) What did Abdul write in the sand?

.......................................................................................................................................

3) Write two things the two friends did at the oasis?

a) ........................................................ b) ........................................................

4) When a friend hurts us why should we write about it in the sand?

.......................................................................................................................................

5) Why is it good to carve our benefits on stone?

.......................................................................................................................................

**08) Write on one of the following. Use about 200 words**

a) Olympic games

- The history of Olympic games
- Some of the events that are held
- London olympic games in 2012

b) Write a speech to be made at your school assembly on A healthy mind in a healthy body include the following

- Eating a balanced diet - (what a balanced diet is)
- Exercises
- Mental happiness

c) Use of mobile phones in the modern world

- Advantages
- Disadvantages

d) Complete the following story

Last Sunday when I was sleeping I heard a loud cry from my neighbours. So, I............

**G.C.E (O/L) Examination - December 2012 English - Part -I Answers**

1) in, on, of, to, before.
2) goes, is, studies, wants, has, is, studies, wants, travel, participate, obey
3) what, where, how, why, when
5) 1. Hello, I am meena, 2. I'm from Kokuvil Central College, 3. Yes, I'm the secretary
4. We are conducting some competitions on essay, speech and debate.
5. Nice meeting you too
7) 1. an old man, 2. No, 3. A breath test, 4. It was on the left ,5. Two





**Part - II (Continue)**

01) Fill in the blanks with the correct form of the word given in the brackets. The first one is done for you. Gandhi was a Hindu lawyer who led India to freedom. Millions of (i) **<u>Supporters</u>** (support, sup porters, supportive) called him Mahathma Gandhi was unique among (ii) __________ (leaders, lead, leading) of revolutions because he never (iii) __________ (struck, strike, striker) a blow. After (iv) ____________ (independent, independence, independently) Gandhi worked hard to stop (v) ____________ (religious, religion, religiously) conflict between the Hindus and the Muslims. In January 1948, while walking to a prayer (vi) ____________ (meet, met, meeting) in New Delhi, he was shot dead by a Hindu extremist.

**02) Read the following passage. In each line one word is incorrect and it is underlined. Write the correct word in the space provided. The first one is done for you.**

| | |
|---|---|
| Books are my friend. They provide | 1.<u>Friends</u> |
| knowledge <u>an</u> entertainment. When I | 2.____________ |
| feel lonely they give <u>my</u> company | 3.____________ |
| when I <u>got</u> pocket money I save it and | 4.____________ |
| <u>by</u> books and add them to the | 5.____________ |
| collection. I preserve <u>they</u> carefully | 6.____________ |
| for future reference. Whenever I was | 7.____________ |
| free I go <u>for</u> the library and read | 8.____________ |
| books Books make <u>your</u> a well - versed | 9.____________ |
| person with <u>balance</u> personality. They | 10.____________ |
| also <u>makes</u> you to be a perfect man | 11.____________ |

**03 ) Fill in the blanks using the words given**

we need water for drinking, bathing and washing. We cannot 1) ____________ without water. We eat plants 2)____________ animals. Plants need water to 3) ____________. Animals too feed on plants and 4) ____________ water. So, water is important 5) ____________ plants, animals and man.

We have to clean our body, clothes and cooking 6) ____________ and pans. We need water 7) ____________ boil rice, vegetables, fish and 8) ____________. Water is necessary for making things in a factory.

We can get water from wells, lakes 9) ____________ and tanks. water gives us power 10) ____________. Rivers running fast and water falls help 11) ____________ to make electric power. We 12) ____________ water power for many things. 13) ____________ power is cheaper than steam 14) ____________ power.

**04)Read the following poem and answer the questions given below.**

I wandered lonely as a cloud
That floats on high over vales and hills,
When all at once I saw a crowd,
A host of golden daffodils
Beside the lake, beneath the trees,
Fluttering and dancing in the breeze.

Continous as the stars that shine
And twinkle on the milky way,
They stretched in never ending line
Along the margin of a bay
Ten thousand saw I at a glance
Tossing their heads in sprightly dence

1) What is referred to:
   a) That (line - 2)
   b) They (line - 9)
2) Give the rhyming words
   a) Cloud ........................ c) Shine ............................
   b) trees ........................ d) glance ..........................
3) Where did the poet see the daffodils?
   ..............................................................................................
4) How many of them did he see at a glance?
   ..............................................................................................
5) What does the poet compare the flowers to?
   ..............................................................................................

05) Match the questions with the answers. Write the number of the question in the correct box. The first one is done for you.

1) Good morning and welcome to our sports programme [1]
2) This is my first question. Where were you born? [ ]
3) What helped you to become an athlete? [ ]
4) Who helped you with your sports activities. [ ]
5) What about your parents? [ ]
6) In which year did you first come to Colombo and Why? [ ]
7) Do you enjoy living in Colombo [ ]
8) Besides sports what are your other interests. [ ]
9) Do you plan to take part in the Olympics? [ ]
10) What do you think of winning and losing in sports? [ ]
11) One last question. What about your higher studies? [ ]



Good morning. Thank you for inviting me to the programme
In 2002. To take part in a Tournament
Running all the way from home to school every morning
Yes, that is the dream of my life
I think athletes should learn to face both
The physical training instructor of our school
In a very remote village in Anuradhapura
They were very helpful, too
Well, the facilities are good but I miss my village
I hope to sit my A/Ls this year
Reading books and relaxing at home

**06)Write an one of the following. Use about 150 words**

a) Write a letter to a teacher who has retired from the teaching service.
- Express your gratitude
- Write about the good work he/she did to the school and community
- Offer support in future activities
- Extend good wishes

(OR)

b) Your father has got a transfer to Colombo you and your family have come to live in a small house in a busy street. Write a letter to a friend in your old school Include the following in your letter.
- a short description about your new house (things you like / dislike about it) the busy surroundings.
- say how you feal about leaving friends, your old house etc.
- Invite your friend to visit you.

**07) Read the following text and answer the questions given below it.**

Sumudu came home from school, tired and looking sad mother noticed her sadness but did not say anything. After a wash and a change she came to have lunch. Sumudu was not feeling hungry. She just kept picking her food and staring at the plate mother noticed this too but did not say anything. When father came home in the evening sumudu broke into loud sobs and ran to him.

"Now, now" he said "don't cry. Tell me why you are crying."

Sumudu explained" my best friend Samanthi is angry with me. She was rude and said hurtful things to me. I'm so sad. It was like a slap in the face"

"Well, you should not get so hurt. Let me tell you a story about two friends. It will help you to get over your sad feelings. Sit here and listen" father said, so he started relating this story.

"Once there were two friends. Their names were Abdul and Ben. One day they were walking through a desert. It was a difficult journey. They were tired and hungry. They no longer joked and laughed and at one point they had an argument and Ben slapped Abdul in the face. Abdul was hurt but without saying anything he wrote in the sand. "Today my friend slapped me in the face" They kept on walking until they found an oasis - They drank enough water to quench their thirst and decided to take a bath. Abdul got stuck in the mud of the water hole and started drowning, but Ben went to him without thinking of his own life and saved him with much difficulty. After Abdul recovered from his near drowning he wrote on a stone "Today my firend saved my life" Ben who slapped him and later saved him asked, "After I hurt you, you worte in the sand and now you wrote on a stone why?

# பெண்களை அடிமைப் படுத்தி இருக்கும் தமிழ்ப் புலவர்கள்



1. **வள்ளுவன்**
2. **தொல்காப்பியன்**
3. **கம்பன்**
4. **சேக்கிழார்**
5. **இளங்கோ**

இவர்கள் அனைவருமே பெண்களை இழிவுபடுத்தி யவர்கள், அடிமை யாக்கியவர்களாவர். என்று சொல்கிறார் பெரியார். அவர் மேலும் கூறுவது இவ்வாறுள்ளது.

நான் சேக்கிழாரை வெளுத்து வாங்குவதைக் கேள்விப்பட்டு மறைமலையடிகளே, என்னிடம் சொன்னார். “நீ பெரிய புராணத்தில் மட்டும் கைவைக்கதே என்று”. அதையே தான் திரு.வி.க வும் சொன்னார். இருவரும் சைவர்களாததால் அதில் அவர்களுக்கு அவ்வளவு பக்தி. தொல்காப்பியன் நம்மை நாலு ஜாதியாகப் பிரித்து நம்மை கடை ஜாதியாக்கி இருக்கிறான்.

ஜாதியைப் பற்றியாவது, எவனாவது ஒருவன் இவன் பேசி இருப்பான். எதற்காக உயர்ந்த ஜாதி, கீழ் ஜாதி இருக்க வேண்டுமென்று பேசி இருப்பான். ஆனால், பரிதாபத்துக்குரிய நம் பெண்களின் - தாய்மார்களின் இழிவை நீக்க வேண்டுமென்று எங்களை (திராவிடர் கழகத்தை) தவிர, வேறு எவரும் தோன்றி தொண்டாற்றவில்லை. நாங்கள் தான் அவர்களின் இழிவினை போக்கப் பாடுபட்டு வருகிறோம். நமது இலக்கியங்கள் யாவும் நம் பெண்களை அடிமைகளாக இருக்க வேண்டுமென்றே வலியுறுத்துகின்றன.

எல்லோராலும் சிறந்த அறி வாளி என்று ஒப்புக் கொள்ளப்படும் வள்ளுவன் என்ன சொல்லிருகிறான். “தற்கொண்டான் பேணி”, தன்னை அடிமையாக, வேலைக்காரியாக கொண்டவனை காப்பாற்றி என்று சொன்னனே தவிர, “தற்கொண்டான்” தன்னை கொண்டவளை காப்பாற்ற வேண்டுமென்று ஆணுக்கு நீதி சொல்லவில்லை. வள்ளுவரை மிகப் பிரமாதப்படுத்தி, அவர் கருத்து முக்காலத்திற்கும் ஏற்றது, வெங்காயம் என்றல்லாம் சொல்லுகிறார்கள். அந்த வள்ளுவனே பெண்களைப் பற்றிச் சொல்லும்போது என்ன சொல்லுகிறான்? பெண்கள் தங்கள் கணவன்மார்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும். கணவனைத் தெய்வமாகக் கருதி, அவனைத் தொழ வேண்டும். அவன் மனம் கோணாதவாறு அவனுக்குப் பணிவிடை செய்யவேண்டும். அவன் என்ன செய்தாலும் அதைச் சகித்துக் கொண்டு அவனுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் கூறி இருக்கிறானே ஒழிய, பெண்களுக்கு ஆண்கள் தொண்டு செய்ய வேண்டும். பெண்கள் சொல்லுகி றபடி ஆண்கள் நடந்து கொள்ளவேண்டுமென்று ஒருவரி கூட சொல்லவில்லை. பகுத்தறிவாளர் என்று ஏற்றுக் கொள்ளும்படி இருக்கிற வள்ளுவனே இப்படியென்றால், மற்றப் புலவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. நம் அறிஞர்களும், புலவர்களும், மனித தர்மத்திற்கு குறளைத் தான் எடுத்துக் காட்டுவார் கள்.

நமக்கு நீதி சொன்னவர்கள் அத்துணை பேரும் பெண்கள் ஒழுக்கமாகக் கற்போடு, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று அறிவுரை கூறி இருக்கிறார்களே ஒழிய, ஆண்கள் கற்பைப் பற்றி எவனும் ஒரு வரி கூட சொன்னது கிடையாது.

அவ்வை ஒரு பெண்ணாக இருந்தும் அவள் பெண்கள் பேச்சைக் கேட்பவர்களுக்கு மானம், ஈனம் இருக்காது என்று சொல்லி இருக்கிறாள். மற்றவர்கள் சொல்லியிருப்பதற்கு கேட்கவா வேண்டும். நமக்கு இருக்கிற இலக்கியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், நீதி நூல்கள் அத்தனையும் பெண்களை இழிவுபடுத்து வனவாகவும், அடிமை படுத்துவனவாகவும், நம் இழிவை நிலை பெற செய்வதாகுமே இருக்கின்றன.



# இன்றைய பெண்களின் நிலையும் பெண் உரிமையும்

இக்காலத்து பெண்கள் உண்மையிலேயே பெண்ணுரிமை அடைந்து விட்டார்களா? என்ற கேள்வி எம்முள் இருந்து கொண்டே இருக்கிறது. நாம் பார்க்கும், பழகும் நிறைய பெண்கள், முழுமையான பெண் அடிமைத்தனத் ஸ்ரீதிலிருந்து வெளியில் வரவில்லை. ஒரு சில பெண்களுக்கு குடும்பத்தில் இருக்கும் அனைவரும் சுதந்திரம் கொடுத்து பெண்ணடிமைத்தனத்திலிருந்து வெளியில் வா என்றாலும் அவர்கள் வருவதாகா் தெரியவில்லை.

இன்றைய பெரும்பாலான குடும்பங்களில் மூடநம்பிக்கை, பிற்போக்குத்தனத்துக்கு முதல் காரணம் இன்றைய தலைமுறை பெண்களே. குடும்பத்தில் இருக்கும் அனைவரும் (ஏன் பழங்காலத்து பெண்கள் கூட) சில சடங்கு சம்பிரதாயங்களை விட்டு வந்தாலும் இன்றைய இளம் பெண்கள் அதனை விடுவதாக இல்லை. இக்காலத்து இளம் பெண்கள் எதனை அவர்கள் முன்னேற்றம் என்று நினைக்கிறார்கள் என்றால், ஆடையில் சில மாற்றத்தையும், தான் படித்து வேலைக்கு போவதனையும் மட்டுமே.

படித்த பல பெண்களை பார்க்கிறோம். அவர்கள் படித்த விடயங்களை அவர்கள் பகுத்தறிந்து எண்ணுவதேயில்லை. என்னதான் படித்து உயர் பதவியில் வந்தாலும், மேற்கத்திய ஆடைகளை அணிவதில் மட்டுமே தாம் விடுதலை அடைந்து விட்டவர்களாக எண்ணிக் கொள்கிறார்கள். அவர்கள் ஆசிரமம், சாமியார், வரலட்சுமி நோன்பு, என்று போகும் பெண்கள் யார்? இவர்களே எல்லா சாஸ்திர, சம்பிரதாயத்திற்கும், மூடநம்பிக்கையில் மூழ்குவதற்கும் முதலில் நிற்பவர்கள்.

முதலில் இவர் கள் கற்க வேண்டியது நாம் இன்னும் பதினேழாம் நூற்றாண்டின் வாசலில் தான் இருக்கிறோம் இன்னும் இந்த நூற்றாண்டில் அடையவேண்டிய முன்னேற்றத்தை அடைவில்லை என்பதைத் தான்.

இன்றைய இளம் பெண்கள், இந்த சாஸ்திர, சம்பிரதாய, மத, சாதி போன்றவற்றிலிருந்து வெளியில் வந்தால் உங்களை சுற்றியுள்ள சமூகமும், உங்கள் குடும்பமும் நிச்சயம் பகுத்தறிவு பெற்று முன்னேறும் என்பதில் சந்தேகமே இல்லை. ஒரு பெண்ணானவள் கல்வி பயின்றால் அந்த குடும்பத்தில் இருக்கும் குழந்தையும் சேர்த்து பயன் பெறும். எனவே நீங்கள் எவ்வளவு முற்போக்குடனும், பகுத்தறிவுடனும் இருகிறீர்களோ அவ்வள்வுக்கு இந்த சமூகமும் முன்னேற்றம் அடையும். பணம் சம்பாதிப்பது மட்டும் பெண்கள் முன்னேற்றம் இல்லை. பணம் சம்பாதிப்பதும் பெண்கள் முன்னேற்றத்தில் ஒன்று என்பதனை உணருங்கள். கணவன், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தவரின் நலனைப் பற்றிச் சிந்திக்காமல் உங்களுக்கென்று நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்துக் கொண்டு வெளியில் சுற்றித் திரிவது சுதந்திரம் என்று சில பெண்கள் நினைக்கிறார்கள். அப்படியான சிந்தனையும் உங்களை விடுவிக்காது என்பதை நீங்கள் உணர வேண்டும். சிந்திப்பீர்களா பெண்களே!




## நிலத்தில் கால் பதித்து நிலவை தொடு பெண்ணே



## செல்வியின் கவிதை

**இராமனே இராவணனாய்
நான் மிகவும் பலவீனப்பட்டுப்
போயுள்ளேன். என்னை யாரும் கேள்வி
கேட்டுத்தொந்தரவு செய்யாதீர்கள்
நூலிழையில் தொங்கிக்
கொண்டிருக்கின்றது எனது இதயம்.
எந்த நேரமும் விழுந்து வெடித்து
விடக்கூடும். அசோகவனங்கள் அழிந்து
போய்விடவில்லை. இந்த வீடே
எனக்கான அசோகவனமாயுள்ளது.
ஆனால்சிறைப்பிடித்தது இராவணனல்ல,
இராமனே தான். இராமனே
இராவணனாய் தனது அரசிருக்கையின்
முதுகுப்புறமாய் முக மூடிகளை
மாற்றிக் கொண்டதை பார்க்க நேர்ந்த
கணங்கள். இதயம் ஒருமுறை அதிர்ந்து
நின்றது. இந்தச் சீதையைச் சிறை மீள
வருவது யார்? அசோக வனங்கள்
இன்னும் எத்தனை காலத்திற்கு?**

# அம்பேத்கரின் பெண்ணியம்



## ஒரு பார்வை

சமத்துவம் என்பது தொடக்கக் காலத்திலிருந்தே இல்லை. ஆணுக்குப் பெண் அடிமையாகவும் ஆதிக்க சாதியினருக்கு அடுத்த சாதியினர் கட்டுப்பட்டும் இருந்து வந்துள்ளனர். வருகின்றனர். பெண்களுக்கு ஆதரவான குரல் சங்க காலத்திலிருந்தே ஒலித்து வருகிறது. பெண்களும் பேசியுள்ளனர். ஆண்களும் குரல் கொடுத்துள்ளனர். இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் பெண்ணியம் பேசப்படுவது தொடர்கிறது.

இருபதாம் நூற்றண்டில் மொத்த தலித் சமூகமும் முன்னேற வேண்டும் என்னும் நிலைப்பாட்டுடன் தீவிரமாக போராடிய அம்பேத்கர் பெண் சமூகம் மேன் மையுற வேண்டும் என தனிக் கவனம் செலுத்தி பெண் விடுதலைக்கு பங்காற்றியுள்ளார். அம்பேத்கரை ஒரு சட்ட மேதையாகவும் ஒரு தலித் தலைவராகவும் போற்றப்பட்டதால், பேசப்பட்டதால் அவர் ஒரு பெண்ணியவாதி என்பது வெளிச்சப்படுத்தப்படவில்லை. அவருடைய சிந்தனையில் ஒரு பகுதி இது.

தலித் என்பதாலும் பெண் என்பதாலும் இரண்டு நிலைகளிலும் பாதிக்கப்படுகிறாள் தலித் பெண். இவைகளில் இருந்து ஒரு சேர விடுபட வேண்டிய நிலையே “தலித் பெண்ணியம்” என்கிறார். பார்ப்பனியத்துக்கும் முதலாளியத்துக்கும் எதிராக தலித் பெண் போராட்டம் நடந்த வேண்டும் என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலும் பெண்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டாலே முன்னேற்றம் காண முடியும் என்னும் கருத்தையும் காட்டியுள்ளார். சாதிய உணர்வைக் களைந்தெறிய பெண்கள் பொதுத் தளத்திற்கு வரவேண்டும் என்று அம்பேத்கர் வேண்டியிருப்பதைக் குறிப்பிட்டுள்ளார். பெண்களை இழிவுபடுத்தும், அடிமைப்படுத்தும் மனுஸ்மிருதியை எரித்தது அவரின் செயல்பாடுகளில் ஒன்று என்கிறார். பொதுகூட்டத்திற்கு பெண்களைக் கூட்டி வர வேண்டும் என்று ஆண்களுக்குக் கட்டளையிட்டுள்ளதையும் அறியச் செய்துள்ளார். அம்பேத்கர் உரையினைக் கேட்ட பெண்கள் மாற்றம் அடைந்ததைக் கண்டு உணர்ச்சிவசப்பட்டு அவரே அழுதார் என்னும் தகவல் நெகிழ்ச்சியடையச் செய்கிறது. அமைச்சர் பதவியை விட்டு அம்பேத்கர் விலகியதற்குக் காரணங்கள் பல இருந்தாலும் பெண்களுக்கு சமத்துவம் சட்டத்தில் இல்லாததும் ஒரு காரணம் என்று குறிப்பிடுகிறார். பெண்களின் பேறு கால விடுப்புக்கும் போராடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாள் முழுதும் அலுப்புத். தருகிற வகையிலே முழு முயற்சியும் செய்தால், ஒரு பெரிய கல்லைக் குன்றின் மேல் எல்லா விலங்குகளுமாகச் சேர்ந்து உருட்டி ஏற்ற முடிந்தது. சில சமயம் கீழே புரட்டிவிடப்பட்ட கல் உடைய வில்லை. பாக்ஸர் மட்டும் முழுமனதுடன் வேலை செய்யவில்லை என்றால் அந்தக் காரியமும் உருப்படியாக நடைபெற்றிராது. மற்ற எல்லா விலங்குகளும் சேர்ந்து சாதித்த காரியங்களை பாக்ஸர் தனியாகவே நின்று சாதிக்கும் வலுவும் உறுதியும் பெற்றிருந்தது.

குன்றின் சரிவிலே ஏற்றிக்கொண்டிருந்த பெரிய கல் நழுவ ஆரம்பிக்கும்: மற்ற மிருகங்கள் எல்லாம் சேர்ந்தும் சமாளிக்க முடியாமல் திணறும், விலங்குகளும் சேர்ந்து சரிவிலே நழுவிக் கீழே இழுத்துச் செல்லப்படும். அப்போதெல்லாம் கயிற்றை இழுத்துப் பிடித்து கல் சரியாமலும், விலங்குகள் நழுவி விழுந்து உயிர் இழந்துவிடாமலும் காப்பாற்றியது பாக்ஸர் தான்.




மூச்சுத் திணற ஒவ்வொரு அங்குலமாக அது கல்லையும் கட்டி இழுத்துக்கொண்டு சரிவிலே ஏறுவதைப் பார்க்கும்போது அற்புதமான நம்பிக்கையூட்டும் காட்சியாகத்தான் இருந்தது அது. உடலெல்லாம் வியர்வை அரும்பி வழிந்தோடும், கால் குளம்புகள் பூமிக்குள் பள்ளமே பறித்துவிடும் போல அழுந்தும். எல்லா விலங்குகளும் அதிசயத்துடனும் ஆச்சரியத்துடனும் பாக்ஸர் வேலை செய்வதைப் பார்த்து, மேலும் கடுமையாக வேலை செய்ய ஊக்கமும் கொள்ளும். இப்படி அதிக வேலை செய்தால் உடல் கெட்டுவிடும் என்று சில சமயம் க்ளோவர் பாஸ்கருக்குச் சொல்வதுண்டு.

ஆனால் பாக்ஸர் அதைக் காதில் போட்டுக்கொள்ளாது. அதனுடைய இரண்டு ஆதாரக் கொள்கைகள் "இன்னும் அதிகமாக உழைப்பேன்" என்பதும், நெப்போலியன் செய்வதே சரி" என்பதும்தான். எல்லாப் பிரச்சினைகளுக்கும் சந்தேகங்களுக்கும் அந்த இரண்டு ஸ்லோகங்களில் பதில் அடங்கியிருந்தது. பாக்ஸரைப் பற்றிய வரையில், ஒரு சேவலிடம் மற்றவர்கள் எழுந்திருப்பதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னால் தன்னை எழுப்பிவிடும்படி ஏற்பாடு செய்துகொண்டிருந்தது. முதலில் அரைமணி நேரம் முன்னால் எழுந்த பாக்ஸர் சில நாட்களுக்குப் பிறகு முக்கால்மணி நேரத்திற்கு முன்னதாக எழுந்திருக்கப் பழகிக் கொண்டது.

இப்பொழுதெல்லாம் ஒழிந்த நேரம் என்று சொல்ல நேரமே கிடையாது அதற்கு. ஆனால் ஒரு விநாடி நேரம் கிடைத்தால் கூட அது தானாகவே கல் பட்டறைக்குப் போய், ஒரு கூடை உடைத்த கற்களைச் சுமந்து வரும்,

(நாளை)

## வரைவோம் வாருங்கள்!



## பெரிய கடிகாரம்



உலகிலேயே பெரிய கடிகாரம் இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டனில் உள்ளது. அந்நகரில் உள்ள நாடாளுமன்ற மாளிகையின் மேல் உச்சியில் அமைந்துள்ளது. இங்கிலாந்தில் பிரிட்டிஷ் பிறோட்காஸ்டிங் கோப்பரேஷன் (BBC) என்ற நிறுவனம், வானொலியையும் தொலைக் காட்சியையும் நடத்தி வருகிறது. இதில் ஒலி - ஒளிபரப்பாகும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சரியான நேர அளவு "பிக் பென்"னின் மணியோசைதான். இரண்டாம் உலகப் போரின்போது, இதைக் குண்டு வீசித் தகர்க்க, ஜேர்மனி எவ்வளவோ முயன்றது. ஆனால் அதன் முயற்சி பலிக்கவில்லை என்றும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆமை-முயல் போட்டி



அன்றொரு நாள் காட்டிலே ஆமைக்கும் முயலுக்கும் போட்டியாம்

உச்சி மலை எல்லையை முதலில் தொட்டால் ஜெயிக்கலாம்
ஹா ஹா-என்று முயலும்தான் ஆமையை பார்த்து சிரித்தது
சிரிப்பைக் கண்ட ஆமையும் கர்வம் வேண்டாம் என்றது
போட்டி தொடங்கிய நேரமே முயல் எடுத்தது வேகமே
பாதி தூரம் வந்ததும் திரும்பி நின்று பார்த்தது
கண்ணுக் கெட்டிய தூரமே காணவில்லை ஆமையை
ஆமை மெதுவாய் வந்ததால் முயலும் கொஞ்சம் தூங்கிச்சு
மெதுவாய் வந்த ஆமையும் முயலை முந்திச் சென்றது
தூங்கி எழுந்த முயல் அது எல்லை நோக்கி ஓடிச்சு
கர்வம் கொஞ்சம் இருந்ததால் அதுவுமே தோற்றுப் போனது
எல்லையில் இருந்த ஆமையும் முயலைப் பார்த்து சொன்னது
திறமை அதிகம் இருந்தாலும் கர்வம் மட்டும் வேண்டாமே!

# சிறுவர் அமுதம்

## காக்கா! காக்கா!



**காக்கா! காக்கா!**
**பறந்து வா**
**அம்மா தந்த பலாப்பழம்**
**நான் உண்ணத் தந்த**
**பலாப்பழம்**
**உனக்கும் தருவேன்**
**பலாப்பழம்**
**காக்கா காக்கா**
**கொத்தித் தின்ன**
**வரவேண்டாம்**
**உனக்கும் தருவேன்**
**அன்புடனே நானும்**
**தருவேன் பலாப்பழம்**

## விடுகதைகள்




1. நம்மிடம் பிடித்த சித்திரம், நம்மையே தொடர்ந்த சித்திரம். அது என்ன?
2. நடுவிலேயே இருக்கும் ராசாவுக்கு நாலா பக்கமும் வெள்ளையர் காவல். அது என்ன?
3. நாலு மூலைப் பெட்டி, நந்தவனப் பெட்டி, ஓடும் குதிரைக் குட்டி. அது என்ன?
4. நான்கு காலுண்டு நாற்காலி அல்ல, மேலே விரிப்புண்டு பல்லாக்கும் அல்ல. அது என்ன?
5. ஒத்தைக்கால் குள்ளனுக்கு எட்டுக்கை?

விடைகள்:
1. நிழல் 2. கரும்பலகை
3. அம்மி 4. கட்டில் 5. குடை

சுடோக்கு எண் 49 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 4 | 3 | 6 | 9 | 1 | 2 | 7 |
| 6 | 7 | 1 | 4 | 2 | 5 | 9 | 8 | 3 |
| 2 | 3 | 9 | 8 | 7 | 1 | 4 | 6 | 5 |
| 4 | 2 | 8 | 6 | 1 | 3 | 7 | 5 | 9 |
| 7 | 9 | 3 | 5 | 8 | 4 | 2 | 1 | 6 |
| 1 | 6 | 5 | 2 | 9 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 1 | 6 | 7 | 3 | 2 | 5 | 9 | 4 |
| 9 | 5 | 7 | 1 | 4 | 8 | 6 | 3 | 2 |
| 3 | 4 | 2 | 9 | 5 | 6 | 8 | 7 | 1 |

சுடோக்கு எண் 50

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | | | 8 | 3 | |
| | | | | 8 | 1 | | | 6 |
| | | 8 | | | | 4 | | |
| | | | | 1 | 7 | | 8 | 3 |
| 5 | | | 4 | | 8 | | | 7 |
| 1 | 8 | | 9 | 3 | | | | |
| | | 1 | | | | 6 | | |
| 6 | | | 7 | 5 | | | | |
| | 3 | 9 | | | | | 4 | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# பழமொழிகளில் கனவும், நினைத்தலும்...

மக்கள் கனவினை, "சொப்பனம்" என்று வழக்கில் வழங்குவர். மனிதனின் ஆழ் மனதில் பதியும் நிறைவேறா ஆசைகளே கனவாகப் பரிணமிக்கின்றன என்று உளவியலறிஞர்கள் கூறுவர். மனதை உள்மனம், வெளிமனம், ஆழ்மனம் என்று பகுப்பர். இவ் ஆழ் மனதிலேயே ஆசைகள், ஏக்கங்கள் உள்ளிட்டவைகள் பதிவுகளாகப் பதிகின்றன. இத்தகைய பதிவுகள் நாளடைவில் கனவுகளாக வெளிப்படுகின்றன.

கனவுகள் சிலருக்கு எதிர் காலத்தில் நிகழும் நிகழ்வுகளை எடுத்துரைக்கும் சாதனங்க ளாகவும் அமைகின்றன. இலக்கியங்களில் இடம்பெறும் கனவுகள் அனைத்தும் இலக்கிய உத்தியாக இலக்கிய ஆசிரியனால் கையாளப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரக் கனவு பின்னர் நடைபெறக் கூடியதை முன்னரே அறிவிக்கும் அறிவிப்பாக முன்குறியாக அமைந்துள்ளது. சிலப்பதிகாரக் காப்பிய மாந்தர்களான கண்ணகி, கோப்பெருந்தேவி ஆகியோரின் கனவுகள் பின்னர் நிகழவிருக்கும் நிகழ்வுகளை முன்னரே அறிவிக்கின்ற நிகழ்வுகளாக உள்ளன.

இக்கனவுகளைப் பற்றிய செய்திகள் பழமொழிகளில் இடம்பெற்றுள்ளன. இக்கனவுகளைப் போன்றே நினைத்தலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. நினைத்தலை சிந்தனை என்பர். நமது மனதில் சிந்தனை என்பது எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கும். நடந்தாலும், இருந்தாலும், படித்தாலும் எந்தச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் உள்மனதில் சிந்தனை, நினைத்தல் என்பது நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது.

மனிதனின் நினைத்தல்களுக்கும் கனவுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மனிதன் எவற்றைச் செய்ய நினைக்கின்றானோ அவைகள் ஆழ்மனப் பதிவுகளாகிக் கனவுகளாக உருவாகின்றன. நினைத்தலாகிய செயல் மனிதனைப் பல்வேறுவிதமான செயல்பாடுகளைச் செய்யத் தூண்டுகின்றன. நல்ல செயல்களுக்கும், தீய செயல்களுக்கும் இந்நினைத்தலே அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன.

வீதியில் வண்டியில் செல்வோர் ஒரே நினைப்புடன் செல்ல வேண்டும். பல்வேறு விதமான நினைப்புகளுடன் செல்கின்ற போது பிற வாகனங்களுடன் மோதி விபத்துக்கள் ஏற்படுகின் றன. இதனால் உயிரிழப்பும் பல்வேறு விதமான இழப்புகளும் நேர்கின்றன. சிலர் தவறான செயல்களைச் செய்துவிட்டு, ""நான் ஏதோ ஒரு நினைப்பில் செய்துவிட்டேன்"" என்று புலம்புவர். இத்தகைய நிகழ்வுகளை நாம் அன்றாட வாழ்வில் காணலாம். சிலர் எதையோ நினைத்துக் கொண்டு எதையோ செய்வர். இந்நினைத்தல் குறித்த பழமொழிகள் மக்களின் வாழ்வியலைத் தெளிவுறுத்துவனவாக உள்ளன.

பகற் கனவு- அதிகாலைக் கனவு

கனவு வருவதைப் பொறுத்து அதனைப் பகற்கனவு, அதிகாலைக் கனவு என்று வகைப்படுத்திக் கூறுவர். பெரும்பாலும் அனைவரும் கனவு காண்பர். சிலர் விழித்துக் கொண்டிருக்கும்போது கனவு கண்டு கொண்டிருப்பர். அவர்களைப் பகற் கனவு காண்பவர்கள் என்று குறிப்பிடலாம். இவர்கள் எப்போதும் தங்களைப் பற்றியும் நடக்க முடியாத செயல்களைக் கறித்தும் கனவு



கண்டு கொண்டே இருப்பர். இவர்கள் காணும் கனவுலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருப்பர்.

இவர்களைச் சோம்பேறிகள் என்றும் மணற்கோட்டை கட்டுபவர்கள் என்றும் கூறுவர். கனவினைக் கண்டு கொண்டே இப்பண்புடையவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். அதோடு மட்டுமல்லாது இவர்கள் எப்போதும் தாங்கள் கண்ட கனவினைத் தம் நண்பர்களிடம் கூறிப் பெருமையடித்துக் கொள்வர்.

நண்பர்கள்

***""பகற்கனவு பலிக்காது"" பார்த்துக்கொள்ளப்பா!***

என்று இகழ்ச்சியாகக் கூறுவர். தேவையின்றி கனவு கண்டு கொண்டிருக்காது கடினமாக உழைத்து முன்னேற வேண்டும் என்ற வாழ்க்கை நெறியை இப்பழமொழி தெளிவுறுத்துகிறது.

அதேபோன்று அதிகாலையில் காணும் கனவு பலிக்கும் என்பர். கண்ணகியும், கோப்பெருந் தேவியும் அதிகாலையில் கனவு கண்டதால் அக்கனவு பலித்தது. அது காப்பியக் கனவு ஆகும். மக்களின் வாழ்க்கையில் நீண்ட காலமாக நிலவி வரும் இத்தகைய நம்பிக்கையை,

***""அதிகாலையில் காணும் கனவு பலிக்கும்""***

என்ற பழமொழி எடுத்துரைக்கின்றது. இஃது மக்களின் நம்பிக்கை சார்ந்த பழமொழியாகும்.

ஊமையும் - கனவும்

வாய்பேச இயலாதவர்களை மூங்கையர், ஊமை என்று கூறுவர். இவர்களால் எதைக் கண்டாலும், கேட்டாலும் வாய் திறந்து மறுமொழி கூறமுடியாது. ஆனாலும் செய்கையில் கூறுவர். அதுபோன்று அவர்கள் கனவு கண்டாலும் அதனைப் பற்றிக் கூற முடியாது. இத்தகைய மாற்றுத்திறனாளியின் இயல்பினை,

***""ஊமை கனவு கண்டால் ஒருத்தருக்கிட்டேயும் செல்லாதாம்""***

என்ற பழமொழி தெளிவுறுத்துகிறது.

வாய் பேச இயலாதவர்கள் தங்களது உள்ளக்கிடக்கையைக் கூட கூற இயலாத நிலையில் உள்ளனர். அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கு நாம் மதிப்பளித்தல் வேண்டும் என்ற பண்பாட்டு நெறிமுறையையும் இப்பழமொழி நமக்கு எடுத்துரைக்கின்றது.

நினைத்தல்

நினைத்தலை, நினைப்பு என்றும் வழக்கில் கூறுவர். ஒருவன் மனதில் எண்ணும் எண்ணங்களையே நினைத்தல் என்பர். ஒரு பொருள் மனிதன், அல்லது தன்னைப் பற்றி ஒருவன் நினைக்கலாம். இந்நினைப்பு அதிகரித்துத் தலைக்கனமாக மாறிவிடக் கூடாது. மேலும் இந்நினைத்தல் தவறானதாக அமைதல் கூடாது. அங்ஙனம் தவறாக அமைந்திடில் வாழ்வில் பிரச்சனைகள் ஏற்பட்டு துன்புற நேரிடும். நம்முடைய வேலையையே கெடுத்துவிடும் தன்மை உடையது. அதனால் தான் நமது முன்னோர்கள்,

**""நெனப்புப் பொழைப்பைக் கெடுத்துவிடும்""**

என்று கூறினர்.

தகுதிக்கேற்ப நினைத்தல் வேண்டும். தகுதிக்கு மீறி இருந்தால் அது வாழ்க்கையை அழித்துவிடும். பிறருக்குத் தீங்கு செய்வதைப்பற்றி நாம் நினைத்தால் அது பிறருக்குத் துன்பத்தைத் தரும். அதனால் நல்லனவற்றை நினைத்து நல்லனவற்றைச் செய்தல் வேண்டும். நற் சிந்தனையை மனதிற்குள் வளரவிட வேண்டும் என்ற வாழ்வியலறத்தை இப்பழமொழி நமக்கு வழங்குகிறது.

நற்கனவு கண்டு, நல்லனவற்றை மட்டும் நினைத்து நாமும் பிறரும் வாழ்வில் உயர வேண்டும். நல்லெண்ணங்கள் நமக்கும் பிறருக்கும் உன்னதமான வாழ்வைத் தரும். பலிதமாகும் கனவினைக் கண்டு பயன்தரும் கருத்துக்களை நினைத்துப் பயனுறு வாழ்க்கை வாழ்வோம் வாழ்வில் வசந்தம் வரும்.

***நன்றி: இணையம்***

# டயலொக் நிறுவனம் நடத்தும் "சித்திரப் போட்டி"

(உடுவில்)

டயலொக் நிறுவனம் வடமாகாணக் கல்வி அமைச்சுடன் இணைந்து மாணவர்களிடையே சித்திரப் போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது. இச் சித்திரப் போட்டி வலய மற்றும் மாகாண மட்டங்களில் நடாத்தவுள்ளதுடன் தரம் 4 முதல் தரம் 7வரையான மாணவர்களுடைய நான்கு பிரிவுகளாக நடாத்தப் படவுள்ளன. மாணவர்களிடையே "பனைமரத்தோப்பு" என்ற தலைப்பிலும், தரம் 5 மாணவர்களிடையே "சமயப் பண்டிகை நிகழ்வு" என்ற தலைப்பிலும் தரம் 6 மாணவர்களிடையே "மட்பாண்டங்கள் செய்வோம்" என்ற தலைப்பிலும் தரம் 7 மாணவர்களிடையே "தகவல் தொடர்பாடலின் நன்மைகள்" என்ற தலைப்பிலும் இச்சித்திரப் போட்டி நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கின்றது.

# வடமராட்சி கிழக்குக்கு தனியான பிரதேச சபை தேவை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி)கான தனியான பிரதேச சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என இப்பிரதேச மக்கள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெற்றது.

இப்பிரதேசம் தற்போது பருத்தித்துறைப் பிரதேசசபையின் செயற்பட்டு வருகின்றது. தமக்கென தனியான பிரதேசசபை ஒன்றில்லாததால் தாம் பெரிதும் பாதிப்படைந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# வேலைக்கான உணவு திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைப்பு

(உடுவில்)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத்திட்டத்தின்கீழ் இலகு வேலைக்கான உணவு செயல்திட்டத்தின்மூலம் ஏழு வீதிகள் புனரமைக்கப்பட வுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் புங்குடுதீவு மணியகாரன் வீதி, நயினாதீவு, நரிக்காட்டு வீதி, அல்லைப்பிட்டி கடற்கரைவீதி, வேலணை அம்பிகை நகர் - கண்ணாபுரம் வீதி, சரவணை பாரதி வீதி, காளி கோயில் வீதி மற்றும் வேலணை நீர் விநியோகத் திட்ட வீதி என்பனவே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இவ் வீதி புனரமைப்பில் ஈடுபடும் மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன. வேலணைப் பிரதேச சபையின் மேற்பார் வையின் கீழ் இவ் வீதிகளின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

# தமிழோசையின் முன்னாள் பொறுப்பாளர் சங்கர் மறைவு



தமிழோசையின் முன்னாள் பொறுப்பாளரும் பிரபல ஒலிபரப்பாளருமான சங்கரன் சங்கரமூர்த்தி ஞாயிற்றுக்கிழமை லண்டன் மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

சுமார் இரண்டரை தசாப்தங்கள் தமிழோசை மூலமாக வானலைகளில் உலகின் பல்வேறு மூலை முடுக்குகளிலிருந்தும் தமிழோசையைக் கேட்டு வந்த அந்தக்கால நேயர்களை மயக்கிய அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் சங்கரன் சங்கரமூர்த்தி

கடந்த சில மாதங்களாகவே நோய்வாய்ப் பட்டிருந்த சங்கரமூர்த்தி, லண்டன் மருத்துவமனை ஒன்றில் சிறுநீரக மற்றும் இருதய நோயால் காலமானார். அவருக்கு வயது 82.

மறைந்த சங்கரமூர்த்தி, 1966 லிருந்து 1991 வரை தமிழோசையின் பணியாற்றினார். அவர் பணியாற்றிய காலப் பகுதியில் தமிழோசை வாரமிருமுறை என்ற நிலையிலிருந்து வாரம் ஐந்து நாட்கள் ஒலிபரப்பு என்ற அளவுக்கு வளர்ந்தது.

தமிழோசையில் 1970கள் மற்றும் 80களில் பெரும்பாலும் சஞ்சிகை வடிவில் இருந்த நிகழ்ச்சி, சங்கரமூர்த்தியின் தமிழ்ப் புலமைக்கு ஒரு பெரிய களத்தைத் தோற்றுவித்துத் தந்தது.

ஆழ்ந்த தமிழ்ப் புலமை கொண்ட சங்கரமூர்த்தி, அந்தக் காலகட்டத்தில் ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் பிரபல நாடகங்கள் பலவற்றையும், கிரேக்க மகாக வி ஹோமரின் இதிகாசங் களான இலியட், ஒடிசி போன்ற வற்றையும், தமிழில் கவிதை நாடக வடிவிலேயே தந்து, அவை நேயர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன.

மற்றொரு பிரிட்டிஷ் நாடகாசிரியர் ஜார்ஜ் பெர்னார்ட் 'ஷாவின் புகழ் பெற்ற நாடகமான "பிக்மேலியன்" என்ற நாடகத்தையும் 'ங்கர் தமிழில் மொழிபெயர்த்து, அதில் தமிழ் திரைப்பட நடிகை ராதிகா நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர அவரே சொந்தமாக பல வானொலி நாடங்கங்களையும் இயற்றியிருக்கிறார்.

சங்கரின் மொழிபெயர்ப்புத் திறன் மற்றும் அவரது குரல் வளம், அவருக்கு பல்லாயிரக் கணக்கான விசிறிகளைப் பெற்றுத்தந்தது.

தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் அவர் பல முறை சென்று நிகழ்ச்சிகளைத் தந்திருக்கிறார்.

# ஆப்கானின் முக்கிய சிறை நிர்வாகத்தை அந்நாட்டிடம் ஒப்படைத்தது அமெரிக்கா



ஆப்கானிஸ்தானின் முக்கிய சிறை நிர்வாகத்தை, அந்நாட்டிடம், அமெரிக்கா ஒப்படைத்துள்ளது. ஆப்கானிஸ்தானில், தலிபான் ஆட்சியை ஒழித்த பின், அமெரிக்க படைகள், அந்நாட்டிலேயே தங்கி விட்டன. ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்பட்ட அமீத் கர்சாய் தலைமையிலான அரசுக்கு, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள், உதவி வருகின்றன. 2014ஆம் ஆண்டு வரை, ஆப்கானிஸ்தான் பாதுகாப்பில் அமெரிக்க படைகள் தொடர்ந்து ஈடுபட ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆட்சியை இழந்த தலிபான்கள், அமெரிக்க படைகளுக்கு எதிராக,அடிக்கடி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆப்கனின் பாக்ரம் நகரில் உள்ள சிறையை, அமெரிக்கா தன்னுடைய கட்டுபாட்டில் வைத்திருந்தது. தலிபான் பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள், 72 மணி நேரத்தில் நேட்டோ படையினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், என்ற நிர்ப்பந்தம் இருந்தது. இந்த நிர்பந்தத்தால், ஆப்கன் வீரர்களுக்கு, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் மீது கருத்து வேறுபாடு இருந்து வந்தது. அதுமட்டுமல்லாது, பாக்ரம் சிறையில், கைதிகள் கொடுமைப்படுத்தப்படுவதாக புகார் கூறப்பட்டது. இதன் காரணமாக, இந்த சிறை நிர்வாகத்தை, ஆப்கான் அரசிடம் ஒப்படைக்க அமெரிக்கா முடிவெடுத்தது. இச்சிறையில், 3,182 கைதிகள் உள்ளனர். இவர்களில், 50 பேர் வெளிநாட்டினர். இந்த சிறை நிர்வாகத்தை, ஆப்கன் அரசிடம், அமெரிக்கா, நேற்று முறைப்படி ஒப்படைத்தது. இதற்கான நிகழ்ச்சியில், ஆப்கான் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஆப்கனிடம் இந்த சிறை நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டாலும், சிறையில் உள்ள, 600 கைதிகளை, ஆப்கன் நிர்வாகத்திடம் அமெரிக்கா, இன்னும் ஒப்படைக்கவில்லை. இச்சிறையின் காவல் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க அதிகாரிகள், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை பொறுப்பில் இருப்பர். நூற்றுக் கணக்கான பயங்கரவாதிகள் அடைக்கப்பட்டுள்ள இந்த சிறையை, ஆப்கன் நிர்வாகம் திறம்பட கையாளுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

# இரசாயன பொருளை கொண்டு சென்ற அமெரிக்கப் பயணி சீனாவில் கைது

ஆபத்தை விளைவிக்ககூடிய இரசாயனப் பொருளை வைத்திருந்ததாக அமெரிக்க பயணி ஒருவர் சீன விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பயணி வைத்திருந்த பாட்டிலில் டிரான்ஸ்- மிதைல் குரோடோனேட் எனும் ரசாயனப் பொருள் இருந்ததாக பெய்ஜிங் சர்வதேச விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 5ஆம் திகதி ஏர் சீனா விமானம் மூலம் இவர் மியூனிக் நகருக்குப் பயணம் செய்ய முயன்ற போது கைது செய்யப்பட்டதாக அந்நாட்டிலிருந்து வெளியாகும் ஸின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் கைது செய்யப்பட்ட அமெரிக்க பயணியின் பெயர் மற்றும் அவரைப் பற்றிய தகவலை வெளியிட அதகாரிகள் மறுத்துள்ளனர்.

இத்தகைய இரசாயனப் பொருள்களை விமானத்தில் கொண்டு செல்லக் கூடாது, அதை மீறியதற்காக அவருக்கு 10 நாள் கண்காணிப்பு சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

# ஆஸி.சட்டவிரோதக் குடியேற்றக்காரரில் ஒரு தொகுதியினரை நவ்று தீவுக்கு அனுப்ப ஏற்பாடு



சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்று கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் முதலாவது தொகுதியினர் இவ்வார இறுதிக்குள் நவ்று தீவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கிறிஸ்மஸ் தீவிலுள்ள இவர்கள் தகுந்த பாதுகாப்புடன் புதன்கிழமை டார்வின் துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு அங்கிருந்து நாவுறு தீவுக்கு அனுப்பிவைக்கப் படுவார்கள் என்றும் பெடரல் பொலிஸர் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், நவ்று மற்றும் பப்புவா நியூகினி தீவுக்கு அனுப்பப்படுபவர்கள் எவ்வளவுகாலம் அங்கு தங்கவைக்கப்பட்டிருப்பார்கள் என்பது தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இதுவரை எத்தீர்மானத்தையும் எடுத்திருக்கவில்லை.

நாவுறு தீவுக்கு ஆட்களை அனுப்புவது தொடர்பில் அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றையும் அந்நாட்டு அரசாங்கம் முன்வைத்துள்ளது.

நவ்று தீவுக்கு ஆட்களை அனுப்புவது தொடர்பான ஒப்பந்தமொன்று அவுஸ்திரேலியாவுக்கும், நாவுறு தீவுக்குமிடையில் கைச்சாத்தாகியுள்ளது.

இத்தீவுக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கும் முதல்தொகுதியில் எத்தனைபேர் உள்ள தங்குவார்கள் என்பது பற்றி இதுவரை எதுவும் அறிவிக்கப்படவில்லை. எனினும், ஒகஸ்ட் 13ஆம் திகதிக்குப் பின்னர் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்தவர்களே இவ்வாறு நாவுறு தீவுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று அவுஸ்திரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் அதனைத் தடுக்கும் நோக்கில் கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்டவர்களை பப்புவா நியூகினி மற்றும் நாவுறு தீவுகளுக்கு அனுப்ப அவுஸ்திரேலியா தீர்மானமெடுத்திருந்தது. இது தொடர்பான சட்டமூலமொன்றையும் அந்நாட்டு அரசாங்கம் நிறைவேற்றியிருந்தது.

இது தொடர்பான ஒப்பந்தமொன்று அவுஸ்திரேலியப் பிரதமர் கிலார்ட் மற்றும் பப்புவா நியூகினி தீவின் பிரதமருக் கிடையில் ஒப்பந்தமொன்றும் கடந்த வார இறுதியில் கைச்சாத்தாகியிருந்தது. ஆபத்தான படகுப் பயணத்தைத் தடுக்கும் நோக்கிலேயே இவ்வாறான தீர்மானத்துக்கு வந்திருப்பதாக அவுஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், கிறிஸ்மஸ் தீவிலுள்ளவர்களை பப்புவா நியூகினி மற்றும் நவ்று தீவுகளுக்கு அனுப்புவது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு 2000 பேர் சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் சென்றுள்ளதாக அவுஸ்திரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உலக பார்வை

# ஈரானை தாக்க முழுவீச்சில் தயாராகும் இஸ்ரேல்




அமெரிக்கா உட்பட மேலை நாடுகளின் எச்சரிக்கையை மீறி ஈரான் அணுகுண்டு தயாரித்து வருகிறது.

இந்த அணுகுண்டு தங்கள் நாட்டுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும் என்று இஸ்ரேல் கருதுகிறது. எனவே அதை அழிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஏற்கனவே ஈராக் இதேபோல அணுஉலையை உருவாக்கிய போது இஸ்ரேல் திடீரென விமான தாக்குதல் நடத்தி அவற்றை முற்றிலும் அழித்தது. அதை போன்ற தாக்குதல் ஈரான் மீது நடக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

சமீப காலமாக இஸ்ரேல் தனது படையை பல்வேறு வகையிலும் தயார்படுத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக விமானப்படை பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. ஈரான் அணுஉலையை தாக்குவதற்காகதான் இந்த பயிற்சி நடப்பதாக கூறப்படுகிறது.

மேலும், அடிக்கடி இராணுவ இரகசிய கூட்டங்களும் நடந்து வருகின்றன. எந்நேரத்திலும் இஸ்ரேல் விமானங்கள் ஈரானுக்குள் பறந்து அணுஉலை மீது குண்டு வீசித் தாக்கலாம் என்ற நிலை உள்ளது.

ஆனால், அதேநேரத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் அதற்கு பதிலடி கொடுப்பதற்காக ஈரானும் தயாராகி வருகிறது.

அதன் விமான படைகள் முழுவீச்சில் தயார் நிலையில் இருக்கின்றன. விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ளன.

இஸ்ரேல் தாக்கினால் உடனே இஸ்ரேல் மீது போர் தொடுத்து அந்த நாட்டில் தாக்குதல் நடத்துவதற்கும் ஈரான் தயாராகி வருகிறது.

# இங்கிலாந்து இளவரசர் ஹரிக்கு தாலிபான்கள் கொலை மிரட்டல்



இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் மற்றும் டயானாவின் மகனான இளவரசர் ஹரி, முன்பு ஆப்கானிஸ்தான் நாட்டில் நேட்டோ படையின் தலைமையின் கீழ் உள்ள பிரிட்டன் படையில் இணைந்து பணியாற்றினார். பின்பு பாதுகாப்பு காரணங்களுக்காக 2008 ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறிவிட்டார். தற்போது மீண்டும் ஆப்கானில் உள்ள ஹெல்மண்ட் பகுதியில், நான்கு வருட காலங்களுக்கு பணியாற்ற பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஹெலிகாப்டர் ஓட்டுனராக பணியாற்றவுள்ள ஹரிஸ் கண்காணித்தல், தடுத்து நிறுத்துதல், விமானங்களுக்கு பாதுகாப்புக் கொடுத்தல் மேலும் தேவைப்படுமானால் தரைத்தளத்தில் இறங்கிப் போரிடுவது போன்ற இராணுவப் பணிகளை அங்கு மேற்கொள்ள உள்ளார்.

ஹரிஸ் நிர்வாணமாக நிற்பது போன்ற படத்துடன் சமீபத்தில் செய்தி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.



அண்மையில் கியுபாவைத் தாக்கிய ஹரிக்கன் சூறாவளியால் கியுபாத் தலைநகரில் 95 வீதம் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது. மில்லியன் கணக்கான மக்கள் மின்வெட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கூடங்குளம் எதிர்ப்பு:

# போராட்டக்காரர்கள் மீது தடியடி – கண்ணீர் புகைவீச்சு



கூடங்குளம் அணுமின் நிலையத்தினை முற்றுகையிட முயன்ற அப்பகுதி மக்கள் மீது தடியடி நடத்தியும், கண்ணிர்புகை வீசியும், தமிழக காவல்துறையினர் கூட்டத்தினைக் கலைத்துவிட்டனர்.

நிலைமை கட்டுக்குள் இருப்பதாக காவல்துறை உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தொடக்கத்திலிருந்தே திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைவதை பல்வேறு தரப்பினர் எதிர்த்து வந்தனர். ஆனால் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் ஜப்பானில் ஃபுகுஷிமாவில் நிகழ்ந்த அணு உலை விபத்திற்குப் பின்னர் இந்த எதிர்ப்பு தீவிரமடைந்தது.

கடந்த 397 நாட்களாக அணுமின் நிலைய எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது. கூடங்குளம் அருகே உள்ள இடிந்த கரை கிறிஸ்தவ தேவாலய வளாகத்தில் மக்கள் திரண்டு, நாள்தோறும் கூடி எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பி வந்தனர்.

அணு மின்நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரினால் கடல் வெப்பமடைந்து மீன்பிடி பாதிக்கப்படும், தங்கள் வாழ்வாதாரம் அழிந்துவிடும் என்பதே அவர்களது முக்கிய வாதமாக இருந்தது.

தவிரவும் கதிரியக்கத்தின் விளைவாய் பல்வேறு உடல்நலக் கோளாறுகள் ஏற்படக்கூடும் எனவும் அவர்கள் கூறினர். ஆனால் மத்திய மாநில அரசுகள் நியமித்த வல்லுநர் குழுக்கள் அணுமின்நிலையத்தால் எவருக்கும் எவ்விதப்பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்தன.

அணுமின்நிலைய அருகாமையிலிருந்து அகற்றப்பட்ட போராட்டக்காரர்கள் இடிந்தகரை தேவாலய வளாகத்தில் தங்கள் போராட்டத்தினைத் தொடர்ந்தனர்.

சுற்றுச் சூழல் கடுமையாக பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பிருப்பதால் அணுமின் நிலையம் அமைய அனுமதிக்கக்கூடாது என்று கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட, மின் உற்பத்திக்கு முதற்கட்டமான எரிபொருள் நிரப்பும் பணி கூடங்குளத்தில் துவங்கவிருக்கிறது என மத்திய அரசு அறிவித்ததன் பின்னணியிலேயே எதிர்ப்பாளர்கள் தேவாலய வளாகத்திலிருந்து வெளியேறி அணுமின்நிலையத்தினை முற்றுகையிடப்போவதாக அறிவித்தனர்.

கடந்த ஞாயிறு இரவு முழுதும் மின்நிலைய வளாகத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் கடற்கரையிலேயே அமர்ந்து அணு உலைக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பிய வண்ணமிருந்தனர்.

கலைந்து போக மறுத்த அவர்கள் மீது திங்களன்று காலை தடியடி உட்பட கண்ணீர் புகைக் குண்டுகளும் வீசப்பட்டதாகவும் இதிலிருந்து தப்புவதற்காக இளைஞர்கள் சிலர் கடலில் குதித்ததாகவும் அப்போது ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்ததாகவும், எதிர்ப்பாளர்கள் சிலர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# இந்திய செய்திகள்

ராகுல் காந்தி மீது கற்பழிப்பு வழக்கு:

## வழக்குத் தொடர்ந்தவர் கிஷோர், தூண்டியவர் அகிலேஷ்



உத்தர பிரதேச மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ராகுல் காந்தி, இளம் பெண் ஒருவரை கற்பழித்து விட்டதாக சமாஜ்வாடி எம்.எல்.ஏ கிஷோர் சமரிட்டே 2010ம் ஆண்டு டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த டெல்லி உயர் நீதிமன்றம், கிஷோர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் அவருக்கு அபராதமாக ரூ.50 லட்சத்தை விதித்தது. இதையடுத்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் கிரோர்.

தம் மனுவில், சமாஜ் வாடி கட்சித்தலைவர்தான் வழக்கு தொடரச் சொன்னதாகவும் ஆனால் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் (உத்தர பிரதேச தேர்தல்) தற்போது அவர்கள் விலகியுள்ளார்கள் என்றார்.

இந்த மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்திற்கு வந்தது. அப்போது நீதிபதி பி.எஸ். சவுகான், சுவாதந்தர் குமார் ஆகியோர் விசாரித்தனர்.

மனுவில் சமாஜ்வாடி தலைவர்களின் பெயரை குறிப்பிட்டிருக்கலாம் என தெரிவித்த போது, கிஷோர் பதிலளித்த விடயம் அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதாவது, ராகுல் காந்தி மீதான கற்பழிப்பு பற்றிய தகவல் எனக்கு கிடைத்ததும் உத்தர பிரதேசம் சென்று சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்தேன். இதில் ராகுலால் இளம் பெண் கற்பழிக்கப்பட்டது உண்மையென தெரியவந்தது.

இதையடுத்து அப்போதைய எம்.எல்.ஏ அகிலேஷ் யாதவிடம் (தற்போதைய உ.பி முதல்வர்) இந்த விடயத்தை தெரிவித்தேன். அவர்தான் ராகுல் மீது வழக்கு தொடரச் சொன்னவர். இதற்கு உதவி செய்வதாகவும் அறிவித்தவர் தற்போது அரசியல் காரணமாக விலகி நிற்கின்றார் என்றார். பின்னர் இந்த வழக்கு வரும் 17ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மத்திய அரசில் ராகுலுக்கு முக்கிய பொறுப்பு வழங்கவேண்டுமென அகிலேஷ் தெரிவித்திருந்ததும் பிந்திய இந்த தகவலும் மத்தியில் பிரச்சினையை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.



மாநிலம் முழுவதும் இரசாயன கலவைகளால் தயாரான விநாயகர் சிலைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்து வருகின்றனர். வரும் 19ம் தேதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அனைத்து இடங்களிலும் இந்து அமைப்புகள் சார்பில் விநாயகர் சிலைகள் நிறுவப்படும்.

களிமண்ணால் ஆன விநாயகர் சிலைகளையே பிரதிஷ்டை செய்ய வேண்டும். பிளாஸ்டர் ஆப் பாரீஸ் உள்ளிட்ட செயற்கை இரசாயன கலவைகள் கொண்டு சிலை செய்யக்கூடாது என்று மாசு கட்டுப்பாட்டு வாரியம் எச்சரித்து வருகிறது.

# தேச துரோகக் குற்றச்சாட்டின் பேரில் ஓவியருக்கு சிறை



இந்தியாவில் கார்டூன் ஓவியர் ஒருவருக்கு தேச துரோகக் குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றம் ஒன்று பதினான்கு நாட்கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

அஸீம் திரிவேதி என்ற இந்த ஓவியர் வரைந்த ஊழல் ஒழிப்பு சம்பந்தமாக வரைந்த கார்டூன்கள் பிரசுரமாகியதை சென்ற வாரக் கடைசியில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

திங்களன்று நீதிமன்றத்தில் ஆஜரான அஸீம் திரிவேதி பிணை கோர மறுத்திருந்தார். உண்மையைச் சொல்வதற்கு துரோகிப் பட்டம் கிடைக்கும் என்றால் தேச துரோகி என்று தான் முத்திரை குத்தப்பட்டாலும் மகிழ்ச்சிதான் என்று அவர் கூறினார்.

இந்திய அரசியல்வாதிகளை வெளிப்படையாக விமர்சித்து கேலி செய்யும் கார்டூன்கள் சில வற்றை வரைந்ததற்காக கடந்த சனிக் கிழமை திரிவேதி கைது செய்யப் பட்டார்.

இதிலே ஒரு படத்தில் இந்திய நாடாளுமன்றம் ராட்சத கழிப்பறைக் குழியாக காட்டப்பட்டிருந்தது. மற்றவற்றில் இந்தியாவின் தேசிய சின்னம் கேலிக்குள்ளாகும் விதமாக மாற்றி வரையப்பட்டிருந்தன.

இந்திய அரசியல் சாசனத்தைக் இழிவுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தேச துரோகம் தொடர்பான சட்டப் பிரிவின் கீழ் திரிவேதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கருத்து சுதந்திரத்தை தாங்கள் ஒடுக்கவில்லை என்று அரசு அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் கருத்து சுதந்திரம் என்பதற்கும் நாட்டின் தேசிய சின்னங்களை இழிவுபடுத்துவதென்பதற்கும் இடைவெளி மிகவும் குறைவுதான் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகினறனர்.

ஆனாலும் ஓவியர் கைதுசெய்யப்பட்டிருப்பதற்கு சிவில் உரிமை குழுக்களிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

## விமானப் பணிப்பெண் கீதிகா சர்மா தற்கொலை வழக்கு வீடியோ கான்பரன்ஸ் மூலம் முன்னாள் அமைச்சரிடம் விசாரணை



விமானப் பணிப்பெண் கீதிகா சர்மாவின் தற்கொலை வழக்கில் மாஜி அமைச்சர் கோபால் கண்டாவிடம் வீடியோ கான்பரன்ஸ் மூலம் விசாரணை நடத்தப்படுமென நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

விமான நிறுவனத்தில் பணியாற்றி வந்த கீதிகா சர்மாவை தற்கொலைக்கு தூண்டியதன் பேரில் அரியானா மாநில மாஜி அமைச்சர் கோபால் கண்டாவும் உதவியாளர் அருணாவும் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவர்கள் இருவரின் மீதான காவல் நிறைவடைந்ததையடுத்து விசாரணையை முடிக்க காவலை நீடிக்குமாறு நீதிமன்றத்தில் பொலிஸ் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதையடுத்து வரும் 25ம் திகதி வரை காவலை நீடித்து நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் கண்டாவை நீதிமன்றத்திற்கு அழைத்து வரும் போது பொதுமக்களால் தங்களுக்கு சிரமம் ஏற்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து கண்டா மற்றும் சர்மா இருவரிடமும் வீடியோ கான்பரன்ஸ் மூலம் விசாரணை நடத்தப்படும் என நீதிபதி உத்தரவிட்டார். டெல்லி ரோகிணி சிறையில் இருக்கும் இவர்கள் இன்று நீதிமன்றத்திற்கு வானில் அழைத்து வரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# டெசோ மாநாட்டு தீர்மானம் : பிரணாபிடம் டி.ஆர். பாலு வழங்கினார்



இலங்கையில் வாழும் தமிழர்கள் தொடர்பாக திமுக தலைமையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகலை, திமுக நாடாளுமன்றத் தலைவர் டி.ஆர். பாலு, இன்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை நேரில் சந்தித்து அளித்துள்ளார்.

டெசோ தீர்மானத்தின் நகலை ஐ.நா. அதிகாரிகளிடம் அளிக்க திமுக பொருளாளர் மு.க. ஸ்டாலினுடன் நியூயார்க் மற்றும் ஜெனிவா செல்விருப்பதாகவும் பாலு, பிரணாப்பிடம் தெரிவித்தார்.

# அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் சம்பியன் வென்றார் அன்டி முர்ரே



ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் சுற்றுத் தொடரின் ஆண்கள் தனிநபர் சம்பியனாக இங்கிலாந்தின் அன்டி முர்ரே தெரிவாகியுள்ளார். நொவக் ஜெகோவிச்சிற்கு எதிரான இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றே அவர் சம்பியனாகியுள்ளார்.

இறுதிப் போட்டியில் இத்தொடருக்கான தரநிலையில் 3ஆம் நிலையில் காணப்பட்ட அன்டி முர்ரேயும், உலகின் 2ஆம் நிலை வீரரான நொவக் ஜெகோவிச்சும் மோதியிருந்தனர். விறு விறுப்பான போட்டியாக அமைந்த இப் போட்டி 5 செற்கள் வரை சென்றிருந்தது.

போட்டியின் முதாலாவது செற்றை அன்டி முர்ரே கடுமையான போராட்டத்தின் நடுவே 7-6 என்ற கணக்கில் வெற்றிகொண்டதோடு, இரண்டாவது செற்றை 7-5 என்ற கணக்கில் வெற்றிகொண்டார். ஆனால் மூன்றாவது செட்டை நொவக் ஜெகோவிச் 6-2 என்ற கணக்கிலும், நான்காவது செற்றை 6-3 என்ற கணக்கிலும் வெற்றி கொள்ள தீர்மானம் மிக்க ஐந்தாவது செற் இற்குப் போட்டி சென்றது.

5ஆவது செற்றை 6-2 என்ற கணக்கில் இலகுவாக வெற்றி கொண்ட அன்டி முர்ரே - ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸின் 2012 இற்கான சம்பியனாகத் தெரிவானார்.

இது அன்டி முர்ரே பெற்றுக கொள்ளும் முதலாவது கிராண்ட்ஸ்லம் பட்டமாகும். இதற்கு முன்னர் அவுஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸின் இறுதிப் போட்டிக்கு 2 தடவைகளும், விம்பிள்டன் தொடரின் இறுதிப் போட்டிக்கு இவ்வருடமும் தகுதிபெற்றிருந்த அவர், இது வரை அவற்றில் வெற்றிபெற்றுக் கொண்டிருந்ததில்லை.

# வோர்ண் சிறந்த அணிக்கே தலைவர் சிறந்த தலைவரல்ல -அண்டர்சன்



இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோர்ணின் தலைமைத்துவத்தைத் தான் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளவில்லை என இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். அவரது புதிய சுயசரிதைப் புத்தகத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிவரவுள்ள அவரது சுயசரிதைப் புத்தகத்தின் குறிப்புகள் சில வெளியாகியுள்ள நிலையிலேயே ஜேம்ஸ் அன்டர்சனின் கருத் துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

2003ஆம் ஆண்டு தனது அறிமுகத்தை மேற்கொண்ட ஜேம்ஸ் அன்டர்சன், நசீர் ஹுசைன், மைக்கல் வோர்ண், கெவின் பீற்றர்சன், அன்ட்ரூ ஸ்ட்ரோஸ் ஆகிய தலைவர்களின் கீழ் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். இதில் மைக்கல் வோர்ணின் தலைமைத்துவம் தொடர்பாகவே ஜேம்ஸ் அன்டர்சன் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தற்போது தானும் மைக்கல் வோர்ணும் நெருக்கமாகக் காணப்படுகின்ற போதிலும், மைக்கல் வோர்ண் அணித்தலைவராகக் காணப்பட்ட காலப்பகுதியில் அவரின் அணித்தலைமையைத் தான் விரும்பியிருக்கவில்லை எனவும், அக்காலப்பகுதியில் தனது தனிமையைத் தான் உணர்ந்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓர் இளைய வேகப்பந்து வீசசாளரான தனக்கு அணித்தலைவரின் ஊக்கப்படுத்தல் தேவைப்பட்டதாகவும், ஆனால் மைக்கல் வோர்ணிடமிருந்து தனக்கு அது கிடைத்திருக்கவில்லை என ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். தான் தனிமையையும், வேறுபட்டதாகவும் உணர்ந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு ஆஷஷ் தொடரை வென்றுகொடுத்த மைக்கல் வோர்ண் சிறந்த அணித் தலைவராகக் காணப்படுகின்ற போதிலும், அதை மறுத்துள்ள ஜேம்ஸ் அன்டர்சன், மிகச்சிறந்த அணியொன்றுக்குத் தலைவராகவே அவர் காணப்பட்டதாகவும், மைக்கல் வோர்ண் மிகச்சிறந்த தலைவர் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

# தேசிய மட்ட கரம் போட்டி வடமாகாணம் பங்கேற்பு

**வலிகாமம்**

இலங்கை கல்வி அமைச்சினால் அகில இலங்கை ரீதியாக மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான கரம் போட்டிகள் எதிர்வரம் 15,16,17 ஆம் திகதிகளில் கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் வடமாகாணத்தைச் சோந்த 15,19 வயதுப் பிரிவு அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

15,19 வயதுப் பிரிவில் வடமாகாணத்தின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு ஆண்**

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, வவுனியா வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

**19 வயதுப் பிரிவு ஆண்**

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

**15 வயதுப் பிரிவு பெண்**

வவுனியா அல் இக்பால் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு பெண்**

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, வவனியா சுந்தர புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

# பயிற்சியாளர் தடுத்தார்: மீறி தங்கம் வென்றார்




லண்டன் பாராலிம்பிக் போட்டியில் ரஷ்ய வீராங்கனை ஆக்சானா சாவ்சென்கோ இன்கிரிடிடுலஸ் 5 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

400 மீற்றர் நீச்சல் போட்டியில் கலந்துக் கொள்ள வேண்டாம் என்று தன்னை பயிற்சியாளர் தடுத்ததாக அவர் கூறியுள்ளார்.

21 வயதான ஆக்சானா சாவ்சென்கோ, 50 மீற்றர் "ப்ரீ ஸ்ரைல்", 100 மீற்றர் "பேக்ஸ்ட்ரோக்", "ப்ரீ ஸ்ரைல்", 400 மீற்றர் "ப்ரீ ஸ்ரைல்", தனிநபர் 200 மீற்றர் ஆகியவற்றில் தங்கப் பதக்கங்களை வென்று ஒரே பரா லிம் பிக்கில் 5 தங்கம் வென்ற சாதனைப் பெண் என்ற பெருமையை சாவ்செனகோ பெற்றுள்ளார்.

இவரது சாதனை மூலம் ரஷ்யா, 32 தங்கங்களுடன் பதககப் பட்டியலில் 3வது இடம் பிடித்துள்ளது. சாதனை குறித்து சாவ்சென்கோ கூறுகையில், ஒரே போட்டியில் 5 தங்கம் வெல்ல முடியும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. மிக மகிழ்ச்சியாக இருக்கிறது.

400 மீற்றர் போட்டியில் கலநதுக் கொள்ளக்கூடாது என்று என் மேல் உள்ள அக்கறையில் பயிற்சியாளர் தடுத்தார் என்றும் ஆனால், அவரை சமாதானப்படுத்தி போட்டியில் கலந்துக் கொண்டு தங்கம் வென்றேன் எனவும் கூறியுள்ளார்.

மேலும், சாவ்செனகோ கடந்த பீஜிங் ஒலிம்பிக் போட்டியிலும் 3 தங் கப்பதக்கங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ருவென்ரி-20 தொடர் பாகிஸ்தானிடம் அவுஸ்திரேலியாவுக்கு ஆறுதல் வெற்றி

ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலிய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 3ஆவதும் இறுதியுமான ருவென்ரி-20 சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 94' ஓட்டங்களால் இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

துபாய் சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஷேன் வொற்சன், டேவிட் வோணர் ஆகியோர் முதலாவது விக்கெட்டுக்காக 10.4 ஓவர்களில் 111 ஓட்டங்களைக் குவிக்க, ஒரு கட்டத்தில் அவ்வணி 14.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்று அதிகமான ஓட்டங்களைப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக வீழ்த்தப்பட அவ்வணியால் 168 ஓட்டங்களையே பெற முடிந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோணர் 34 பந்துகளில் 59 ஓட்டங்களையும், ஷேன் வொற்சன் 32 பந்துகளில் 47 ஓட்டங்களையும், கிளென் மக்ஸ்வெல் 20 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 4 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், உமர் குல் 4 ஓவர்களில் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், யாசிர் அரபாத் 4 ஓவர்களில் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ராஸா ஹஸன் 3 ஓவர்களில் 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

169 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 94 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது.

ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்த அவ்வணி, 5 விக்கெட்டுக்களை இழந்து 19 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக அதிகபட்சமாக நசீர் ஜம்ஷெத் 23 பந்துகளில் 17 ஓட்டங்களையும், யாசீர் அரபாத் 19 பந்துகளில் 15 ஓட்டங்களையும், அப்துல் ர'ாக் 27 பந்துகளில் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 3.1 ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பற் கமின்ஸ் 4 ஓவர்களில் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஷேன் வொற்சன், பிரட் ஹொக், கிளென் மக்ஸ்வெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

3 போட்டிகள் கொண்ட இத் தொடரை பாகிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியின் நாயகனாக டேவிட் வோணரும், போட்டித் தொடரின் நாயகனாக சயீட் அஜ்மலும் தெரிவாகினர்.

# 'பேஸ்புக்'கில் சச்சின்

இந்திய கிரிக்கெட் அணியின் மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் டெண்டுல்கர் சமூக வலைதளமான "பேஸ்புக்கில" நேற்று இணைந்தார்.

2010ல் டுவிட்டர் சமூக வலைதளத்தில் சச்சின் இணைந்தார். இதையடுத்து, பல லட்சம் ரசிகர்கள் டுவிட்டரில் இணைந்தனர்.

தற்போது 26,80,952 ரசிகர்கள் டுவிட்டர் இணையதளத்தில் இவரை பின்பற்றுகின்றனர். மற்றொரு சமூக வலைதளமான பேஸ்புக்கிலும் இந்திய நட்சத்திர வீரர் சச்சின் நேற்று இணைந்தார்.

இதையடுத்து, சில மணி நேரத்தில் 4 லட்சம் பேர் இவரை பின்பற்ற தொடங்கினர். இதில் புகைப் படங்கள், வீடியோக்களை ரசிகர்களிடம் பகிர்ந்துள்ளார்.இந்திய வீரர் யுவராஜ் சிங் குறித் தும் இளைஞர் உலகக் கிண் ணத் தொடரில் கிண்ணம் வென்ற இந்திய அணித்தலைவர் உன்முக்த் சந்த்திற்கும் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

இது குறித்து சச்சின் கூறுகையில், எனது பேஸ்புக் சமூக வலைதள்த்திற்கு எல்லா ரசிகர்களையும் வரவேற்கிறேன். சிறுவயது முதல், உலகக் கிண்ணம் வெல்லும் இந்திய அணியில் இடம் பெற வேண்டும் என்ற கனவு நிறைவேற தொடர்ந்து 22 ஆண்டுக ளாக ஓடினேன்.

ரசிகர்களின் ஆதரவு இல்லை என்றால் இது சாத்தியம் இல்லை. எனக்காக வேண்டிக் கொண்ட ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்கும் சிறந்த வழியாக இதை கருதுகிறேன்.

2011ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில், தொடர் நாயகன் விருது வென்று அசத்தினார் இந்திய வீரர் யுவராஜ் சிங். புற்றுநோய் பாதிப்பிலிருந்து மீண்ட இவர் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு திரும்பியது மகிழ்ச்சி எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது சச்சினின் ரசிகர்களின் எண்ணிக்கை 551,004 ஆகும்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 12.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது